மலர் 9 • இதழ் 4 • ஆகஸ்ட் 2024 • ரூ.20/-

# யாதும்

நமது கல்வி – நமது சூழல் – நமது பணி



## விதைகளுக்குக் கல்வி தரும் உள்ளங்கள்!

## எப்படி வேலை செய்வீர்கள் நீங்கள்?

## நுழைவுத்தேர்வுகளின் தோல்வி!

# மரம் வளர்ப்போம்
# மழை பெறுவோம்



சமுதாய நலன் கருதி வெளியிடுவோர்




**சக்தி ®**

**மசாலா**




**சக்திமசாலா பிரைவேட் லிமிடெட்**

6, மாமரத்துப்பாளையம், ஈரோடு - 638 004.

போன் : 0424 - 2533601.

E-mail : headoffice@sakthimasala.co.in

www.sakthimasala.com

• **சக்தி** மசாலா சமையல் பொடி வகைகள் • **சக்தி** ஊறுகாய் வகைகள் • **சக்தி** சன் பிளவர் ஆயில் • **சக்தி** பருப்பு வகைகள் • **சக்தி** பஜ்ஜி போண்டா மாவு • **சக்தி** ராகி மாவு • **சக்தி** கடலை மாவு • **சக்தி** அப்பளம் • நெய்

ENGINEERING | ARCHITECTURE | DENTAL | RESEARCH | ARTS & SCIENCE

# YOUR CAREER BEGINS WITH US





COURSES AVAILABLE

Aeronautical | Automobile | Bioinformatics | Biomedical | Biotechnology | Chemical | Civil | Computer Science and Engineering | Electrical and Electronics | Electronics and Communication | Electronics and Telecommunication | Electronics and Instrumentation | Information Technology | Mechanical | Mechanical and Production | Bachelor of Architecture (B.Arch.) | Bachelor of Dental Surgery (BDS)

100% PLACEMENT OPPORTUNITY

ADMIRABLE INFRASTRUCTURE

WORLD CLASS ACADEMIC AMBIENCE

EMINENT FACULTY

SATHYABAMA UNIVERSITY


(Established under section 3 of the UGC Act, 1956)
Declared as Category " A " University by MHRD, Government of India

facebook.com/SathyabamaUniversityOfficial

www.sathyabamauniversity.ac.in

Jeppiaar Nagar, Rajiv Gandhi Salai, Chennai - 600 119.

Phone : Administrative Office: 044-2450 3150 / 51 / 52 / 53 / 54 / 55 | Entrance Exam Office: 044-24502436 | Fax : 044 - 2450 2344




# விதைகளுக்குக் கல்வி தரும் உள்ளங்கள்!

**அனைவருக்கும் அன்பு வணக்கம்.**

அகரம் விதைத் திட்டத்திற்கு இது 15–வது ஆண்டு. கிராமப்புறங்களிலும் எளிய குடும்பங்களிலும் பிறக்கும் பிள்ளைகளுக்கு உயர்கல்வி வாய்ப்பை வழங்கும் இந்தத் திட்டம் என் மனதுக்கு மிகவும் நெருக்கமானது. 3,440 முன்னாள் மாணவர்கள் இருக்கிறார்கள்; 1,850 மாணவர்கள் படித்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் 350–க்கும் மேற்பட்ட கல்லூரிகளில் படித்திருக்கிறார்கள். 12–ம் வகுப்பு வரைக்கும் அரசுப் பள்ளியில் பயின்று, அதன்பிறகு கல்லூரிப் படிப்பை முடித்து, வாழ்க்கையில் பல உயரங்களை அடைந்துள்ளார்கள். விதைத் திட்டம் மூலம் நாங்கள் ஆயிரக்கணக்கான மாணவர்களின் வாழ்க்கையில், அவர்களின் குடும்பத்தில், மாற்றத்தை உருவாக்கப் பலரின் பங்களிப்பு மிக மிக முக்கியமாக இருந்து வருகிறது.

முக்கியமாக, இத்தனை மாணவர்களின் வாழ்க்கையில் மாற்றத்தை உருவாக்க, தொடர்ச்சியாக எங்களுக்கு 30–க்கும் மேற்பட்ட கல்லூரிகள் ஆண்டுதோறும் இவர்களுக்கு இடங்களைத் தந்து ஆதரவாக இருந்து வருகிறார்கள். அந்தக் கல்லூரிகளுக்கு மனமார்ந்த நன்றிகள். இங்கே அந்தக் கல்லூரிகளின் பெயர்களைப் பகிர்ந்துகொள்ள நினைக்கிறேன்.

சென்னையில் Aarupadai Veedu Institute of Technology, Alpha Arts & Science College, Apollo Arts & Science College, Apollo Hospitals, Aravind Eye Hospitals, DOT School of Design, Dr. MGR University, Kauvery Hospitals, Dr. MGR Janaki Arts & Science Womens College, Rajalakshmi Engineering College, Rajalakshmi Institute of Technology, Rajalakshmi College of Nursing, Sri Sairam Engineering of College, Sathyabama Institute of Science and Technology, Saveetha Engineering College, SRM Institute of Science and Technology, Vel Tech University, Vels Institute of Science, Technology and Advanced Studies (Vels University), Venkateshwara Hospitals, Valliammal College for Women – Anna Nagar ஆகிய கல்வி நிறுவனங்கள் அகரத்துடன் துணை நிற்கின்றன.



வேலூரில் VIT University, கோயமுத்தூரில் Hindustan Group of Institution, Kumaraguru College of Liberal Arts, Kumaraguru College of Technology, RVS College of Arts and Science, Sankara College of Science and Commerce, Sri Krishna Group of Institution ஆகிய கல்வி நிறுவனங்கள் விதைத் திட்டத்துக்கு ஆதரவளிக்கின்றன. மயிலாடுதுறை AVC Polytechnic College, ஈரோடு Builders Engineering College, திருநெல்வேலி Einstein Group of Institution, விழுப்புரம் KG College of Pharmacy and Research Institute, திருச்சி MAM Group of Institutions, குமாரபாளையம் SSM College of Engineering, திண்டுக்கல் PSNA Engineering of College மற்றும் RVS Kumaran Arts & Science College ஆகிய கல்வி நிறுவனங்களின் ஆதரவும் முக்கியமானது.

இதேபோல் ஒவ்வோர் ஆண்டும் அகரம் தன்னார்வலர்களும், முன்னாள் மாணவர்களும் கொடுக்கும் உழைப்புதான் அகரத்தின் நம்பிக்கையாகவும், பிடிப்பாகவும் இருக்கிறது. அதனால்தான் இது ஓர் இயக்கமாக மாறியுள்ளது.

சமீபத்தில் முன்னாள் மாணவர்களுடன் கலந்துரையாடும்போது, ‘அகரம் என்பது உங்களுடைய புரிதலில் என்ன?’ என்று கேட்டோம். அதற்கு ஒரு தங்கை ‘நான்தான் அகரம்’ என்றார்.

அதற்கு அர்த்தம் கேட்டேன். “நிறைய சவால், நிறைய பிரச்னைகள் வந்திருக்கு. நிறைய விஷயங்கள் சரியில்லாமல் இருந்தன. பிரச்னைகள் வரும்போது காம்ப்ரமைஸ் பண்ணிக்காம, சுற்றிலும் நடப்பதைக் கண்டு தளர்ந்து போகாம, எது முக்கியம்னு புரிய வச்சி எல்லாத்தையும் எதிர்கொள்றதுக்கு தைரியம் கொடுத்தது அகரம். என்னை அப்படித் தயார்படுத்தி தைரியமாகவும் விடாமுயற்சியுடனும் பயணிச்சு வர்றேன். அதனால்தான் ‘நான்தான் அகரம்’னு சொன்னேன்” என்றார்.

‘இந்தச் சமுதாயத்திற்கான சரியான மாணவர்களை உருவாக்கி இருக்கோம்’ என்கிற நிறைவும் பெருமிதமும் அப்போது கிடைத்தது. முக்கியமாக, இப்படிப்பட்ட மாணவர்களை உருவாக்குவதற்குப் பலருடைய உழைப்பும், சிந்தனையும், விடாமுயற்சியும் அகரமுடன் இருந்திருக்கிறது. அவர்கள் எல்லோருக்கும் நன்றிகள்.

இந்த ஆண்டு விதைத் திட்டத்தில் தமிழ்நாடு முழுக்க உள்ள மலைப்பகுதிப் பள்ளிகளில் பன்னிரண்டாம் வகுப்பு முடித்த மாணவர்களின் உயர்கல்விக்கு முன்னுரிமை கொடுக்கிறோம்.

இப்படிப் பல்லாயிரக்கணக்கான மாணவர்களின் வாழ்க்கையில் மாற்றத்தை உண்டாக்குவதற்கு அரசுப் பள்ளிகள்தான் நம்பிக்கையாக இருக்கின்றன. அந்த அரசுப் பள்ளிகள் நன்றாகச் செயல்படுவதற்கு நாம் துணை நிற்க வேண்டும். கல்வி நம் எல்லோருடைய ஒற்றை நம்பிக்கை. இந்த மாற்றம் பலரின் வாழ்க்கையிலும் நிகழ்வதற்கு இங்கே காரணமாக இருந்து உழைக்கிற ஒவ்வொருவருக்கும் நன்றி சொல்ல வேண்டும்.

அன்புடன்,

**சூர்யா**

நிறுவனர் - அகரம் பவுண்டேஷன்


# யாதும்

நமது கல்வி - நமது சூழல் - நமது பணி

தமிழ் மாத இதழ்

மலர் 9 • இதழ் 4

ஆகஸ்ட் 2024

கௌரவ ஆசிரியர்

**திரு. சூர்யா**

பதிப்பாளர் - ஆசிரியர்

**த.செ.ஞானவேல்**

இதழாசிரியர்

**வள்ளி**

வடிவமைப்பு

**கே.உதயா**

புத்தக ஆக்கமும் வடிவமைப்பும்:

தரு மீடியா (பி) லிட்.,
10/55, ராஜு தெரு,
மேற்கு மாம்பலம்,
சென்னை - 600 033
தொலைபேசி : 9952920801



இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்துப்பூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும்.



Published by T.J.Gnanavel,
on behalf of
Tharu Media (P) Ltd.,
10/55,Raju Street,
West Mambalam,
Chennai - 600 033.
email:
contactyadhum@gmail.com



# இருப்பது ஒரு பூமி!

வான்மதி அவள் தோழியின் பிறந்தநாளுக்குப் புறப்பட்டுக் கொண்டிருக்கிறாள். அழகான உடை உடுத்தி, முக அலங்காரம் எல்லாம் செய்துகொண்டு வெளியே கிளம்பப் போகும்போது அம்மா ஒரு குப்பைப் பையைக் கையில் கொடுத்தார்.

''வான்மதி, இதைப் போற வழியில குப்பைத்தொட்டில போட்டிரும்மா!"

"அம்மா, நான் சுத்தமா இருக்கேன்மா!"

''அதுக்கென்ன? உன்னைக் குப்பையைக் கையால தொடச் சொல்லலையே. இது பேப்பர் பை. இதன் கைப்பிடி கயிற பிடிச்சி கவர தூக்கிப் போட்டுருன்னுதான சொன்னேன். எட்டாங்கிளாஸ் படிக்கிறதுக்குள்ளாறயே இவ்வளவு பிகு பண்றியே!"

வான்மதி எரிச்சலோடு அந்த கவரைத் தூக்கிக்கொண்டு போனாள். குப்பைத் தொட்டியை நெருங்கும்போது சரியாக பேப்பர் கவரின் கீழ்ப்பகுதி கிழிந்து மொத்தக் குப்பையும் நடு ரோட்டில் கொட்டியது. வான்மதிக்கு அதைப் பார்க்க அருவருப்பாகவும் எரிச்சலாகவும் இருந்தது.

"இதுக்குதான் அம்மாவ பிளாஸ்டிக் கவர் உபயோகிங்கன்னு சொல்லுவேன். பெரிசா சுற்றுச்சூழல் அது இதுன்னு பேப்பர் கவர்ல போட்டுத் தர்றாங்க. இப்ப என்ன பண்றது?" என்று வாய்க்குள் முனகினாள்.

குப்பையை ரோட்டில் விட்டுவிட்டுப் போக அவளுக்கு மனதில்லை. அப்படியே கையால் குப்பையை அள்ளி கவரில் வைத்தாள். அதை மொத்தமாக எடுத்துக் குப்பைத்தொட்டியில் அருவருப்புடன் வீசினாள். நல்லவேளையாக அருகில் ஒரு அடிபம்பு இருந்தது. அதில் ஒரு அக்கா தண்ணீர் பிடித்துக் கொண்டிருந்தார். அவர் உதவியுடன் கை கழுவினாள். பிறகு, இரண்டு தெரு தள்ளி இருக்கும் தோழியின் வீட்டுக்குப் போய்ப் பிறந்த நாள் கொண்டாட்டத்தில் கலந்துகொண்டாள்.

முதலில் வாடிப் போய் இருந்த அவளுக்குப் பிறந்தநாள் கொண்டாட்டம் பிடித்திருந்த காரணத்தால் அனைத்தையும் மறந்து விளையாடினாள். இருந்தாலும் அம்மா மீது கோபம் உள்ளுக்குள் இருந்ததுதான்.

வீடு திரும்பும்போது வான்மதிக்கு தோழி ஒரு கண்ணாடி ஜாடியைப் பரிசளித்தாள். அதில் நீர் இருந்தது. அந்த நீருக்குள் நான்கைந்து வண்ண

மீன்கள் இருந்தன. “இது எனக்கா? நான் அல்லவா பிறந்தநாள்காரியான உனக்குப் பரிசளிக்க வேண்டும். ஆனால் நீ எனக்குப் பரிசளிக்கிறாயே'' என்று வான்மதி வியந்து போனாள். மகிழ்ச்சியில் குதித்தாள்.

‘இதை எப்படி வீட்டுக்குக் கொண்டுபோவது’ என்று தவித்தாள். தோழியின் அப்பா ஒரு அட்டைப்பெட்டியில் நிறைய தாள்களைப் போட்டு, அதில் மீன் தொட்டியை வைத்துக் கொடுத்தார். வான்மதி அந்த அட்டைப்பெட்டியில் மீன் தொட்டியை வைத்து எடுத்து வந்தாள். தெருவில் கவனமாக ஒவ்வொரு எட்டாக வைத்து நடந்து வந்து வீட்டை அடைந்தாள்.

அம்மா அதைப் பார்த்து, “ஆஹா, மீன்'' என்று துள்ளினார். ஆனால் வான்மதி முகத்தைத் திருப்பிக்கொண்டாள். அம்மா காரணம் கேட்டபோது சொல்லாமல் பிகு செய்தாள். இரவு தூங்கும்வரை அம்மாவிடம் பேசவே இல்லை. அம்மாவும் சோகத்தோடு அமைதியாக விட்டு விட்டார். வான்மதி அசந்து தூங்கிப் போய்விட்டாள்.

திடீரென்று அவளுக்கு நள்ளிரவில் விழிப்பு வந்தது. மீன் தொட்டியில் இருக்கும் மீன்களின் நினைப்பு அப்போது வந்தது. எழுந்து சென்று லைட்டைப் போட்டு மீன்களையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

‘இவை எல்லாமே தனித்தனி உயிர்கள். இந்த மீன்கள் அவற்றின் உலகமாக இந்தத் தொட்டியைத்தான் நினைத்து வைத்திருக்கும். நான் என் தோழி வீட்டிலிருந்து நடந்து நடந்து என் வீட்டுக்கு எடுத்து வந்தது இந்த மீன்களுக்குத் தெரியுமா? அதன் உலகத்தோடு இந்த மீன்களைத் தூக்கி வந்ததால் இந்த மீன்களுக்குப் பிரச்னை இல்லையா?’

இப்படியெல்லாம் நினைத்தாள். திடீரென்று தன்னுடைய உலகம் எதுவென்று யோசித்தாள். பூமிதான். மீன் தொட்டியை நான் தூக்கிவந்தது போலப் பூமியை அலேக்காக யாராவது தூக்கிச் சென்றால் என்னவாகும்? இந்த மீன்கள் போல நான் பாதிப்பில்லாமல் இருப்பேனா!

இல்லை... இல்லை... பூமிக்கு சந்திரனும் அதைவிட முக்கியமாகச் சூரியனும் தேவை. சரி, பூமியையும் சூரியனையும் மட்டும் தூக்கிச் சென்றால் பிரச்னை இல்லையா?

இல்லை... பூமி மீது விண்கற்கள் மோதாமல் காப்பாற்ற ஜூபிட்டர், நெப்டியூன், யுரேனஸ் போன்ற பிற கிரகங்களும் தேவை.



அப்படியானால் சோலார் சிஸ்டம் என்ற சூரியக் குடும்பத்தை அலேக்காக ஒருவர் தூக்கிச் சென்றால் நான் பாதுகாப்பாக இருப்பேனா?

இல்லையே... சூரியன் பால்வெளி மண்டலத்தின் மையத்தைச் சுற்றுகிறதாமே. அப்படியானால் மொத்த பால்வெளி மண்டலத்தையும் தூக்கிச்சென்றால் பாதிப்பில்லையா? ஆம், அப்படிச் செய்தால் ஓரளவுக்கு பாதுகாப்புதான்.

திடீரென்று ஏதோ நினைவு வந்தவளாய், ‘பால்வெளி மண்டலத்தில் எத்தனை கிரகங்கள் இருக்கின்றன’ என்று அம்மாவின் மொபைலை எடுத்து கூகுளில் தேடினாள். அதில் பத்தாயிரம் கோடி கிரகங்கள் இருப்பதாகப் படித்து அதிர்ச்சியில் நின்றுவிட்டாள்.

இதுவரை இதில் வேறு எங்கும் உயிர் இருப்பதாக மனிதனுக்குத் தகவல் கிடைக்கவில்லை. இந்த மொத்தப் பிரபஞ்சமே ஒரு பாலைவனம். அந்தப் பாலைவனத்தில் பூத்த பாலைவனச் சோலைதான் பூமி.

கோடிக்கணக்கான விஷயங்கள் ஒன்று சேர்ந்து, கோடிக்கணக்கான ஆண்டுகள் கடந்து உருவானதுதான் என் பூமி. அதை நான் எப்படிப் போற்ற வேண்டும், எப்படிப் பாதுகாக்க வேண்டும்.

இப்படி பிளாஸ்டிக்கும் புகையும் போட்டல்லவா அந்த உயிர் பூமியைச் சாகடித்துக் கொண்டிருக்கிறேன்! ‘பிளாஸ்டிக் வேண்டாம்’ என்று அம்மா கொடுத்த பேப்பர் கவர் பிய்ந்து கொட்டியதற்கு எவ்வளவு கோபப்பட்டேன். காலை எழுந்தவுடன் அம்மாவிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று நினைத்துக்கொண்டு மீனுக்கு உணவு கொடுத்தாள்.

பெட்ரூம் வந்தாள். பெரிய கட்டிலில் அம்மாவுக்கு அருகே தம்பி படுத்திருந்தான். அவனை மெல்ல உருட்டிக் கொஞ்சம் தள்ளிப் படுக்க வைத்தாள். கிடைத்த இடைவெளியில் படுத்துத் தம்பியை இன்னும் தள்ளிவிட்டாள்.

தூங்கிக் கொண்டிருக்கும் அம்மாவைப் பக்கவாட்டில் கட்டிக் கொண்டாள். தூக்கக் கலக்கத்திலும் அம்மாவின் கைகள் அவளை ஆதரவுடன் அரவணைக்கத் தவறவில்லை. ‘தயவுசெய்து காலையில் அம்மாவுக்கு சாரி எல்லாம் சொல்லிராத செல்லம்’ என்று அம்மாவின் அந்தத் தொடுதல் அவளுக்குச் சொன்னது. கண்களை மூடினாள். பால்வெளி மண்டலத்தில் மீன்கள் நீந்தின.

**– விஜயபாஸ்கர் விஜய்**

கொரோனா காலத்தில் சிறு குழந்தைகள் முதல் பதின்பருவப் பெண் குழந்தைகள் வரை பலரும் எங்கள் வீதி வகுப்பறைக்குள் வந்துவிட்டனர். முன்னரே சொன்னது போல், சில பெண் குழந்தைகள் வீட்டுச்சூழலின் காரணமாக மில் வேலைக்குப் போனார்கள்.

வீதி வகுப்பறையில் விடுபட்டவர்கள் பதின்பருவ ஆண் குழந்தைகளே! நம் வீடுகளில் பெண் குழந்தைகள் மீது இருக்கும் கண்காணிப்பும் கட்டுப்பாடுகளும் ஆண் குழந்தைகளுக்கு இல்லை. காலையில் எழுந்தால் எங்கே போகிறார்கள், எப்போது வருகிறார்கள் என்றே தெரியாது.

# சமூகத்தின் வகுப்பறை!



இரண்டு பயங்கள் எனக்கு இருந்தன. ஒன்று, வேலைக்குப் போய் சம்பாதிப்பதால் தற்போது பெரிய பையன்களின் கையில் இருக்கும் செல்பேசி. இரண்டாவது, போதைப் பழக்கங்கள். மிகச் சிக்கலான வயது இது. வயதுக்கு மீறிய விஷயங்கள் செல்பேசி வழியே எளிதாகக் கிடைத்து விடுகின்றன. கண்மாய், வயல்வெளி, ஆலமரம் என்று இவர்கள் தங்களைவிட வளர்ந்தவர்களுடனே சுற்றித் திரிந்தனர். ஒரு சில பையன்கள் சிகரெட் பிடிப்பதாகவும் தகவல் வந்தது.

ஏதேனும் செய்ய வேண்டும். என்ன செய்வது? களத்தில் எழும் புதுப்புதுப் பிரச்னைகளுக்குத் தீர்வு உடனே கிடைக்காது. பத்தாம் வகுப்பு மாணவர்களுக்கு வகுப்பு எடுக்கும்போது, சில மாணவர்களிடம் தனியாக உரையாடினேன். சில தடுமாற்றங்களைப் பகிர்ந்துகொண்டனர். சிலம்பம் கற்றுக்கொள்ள விரும்புவதாகக் கூறினர். சற்று நிம்மதியாக இருந்தது, பிரச்னைக்கு ஒரு தீர்வும் கிடைத்தது.

ஆனால் இந்தக் கொரோனா காலத்தில் சிலம்பம் கற்றுக் கொடுக்க எங்கேயிருந்து மாஸ்டரைத் தேடுவது? அப்படியே அவர் எங்காவது இருந்தாலும் என் மாணவர்கள் சிலம்பம் கற்றுக்கொள்ளப் போக முடியாது. பேருந்து இல்லை. சிலம்பம் கற்றுத் தருபவர் கிராமத்திற்கு வந்தால்தான் உண்டு. வர வேண்டுமே! அதுவும் அருப்புக்கோட்டையில் இருந்து 30 கி.மீ பயணித்து வர வேண்டும். இந்தப் பயணத்துக்காக அவர் கூடுதல் கட்டணம் கேட்டால் பெற்றோர்களால் நிச்சயமாகத் தர முடியாது. எல்லாருக்கும் சேர்த்து கட்டணம் என்னாலும் தர முடியாது.

வழி கிடைத்துவிட்டது. ஆனால் செயல்படுத்துவது எப்படி? ஒன்றும் புரியவில்லை. சிலம்பம் கற்றுத் தரும் கிளப்புகளில் மாதக் கட்டணமாக ரூ. 1,000 முதல் ரூ. 2,000 வரை கேட்டனர். தீவிர தேடலுக்குப் பின் அருப்புக்கோட்டையிலே சிலம்பம் கற்றுக் கொடுக்கும் திரு. ஆனந்தராஜ் மாஸ்டரைக் கண்டுபிடித்தேன். குறைவான கட்டணத்தில் என் மாணவர்களின் ஊருக்கு வந்து சொல்லித் தர வேண்டும் என்ற கோரிக்கையுடன் சந்தித்துப் பேசினேன்.

முதலில் மறுத்தார். பின்பு என் மாணவர்களுக்காகப் பேசுவதைத் புரிந்துகொண்டு, ஊருக்கு வந்து கற்றுத் தரச் சம்மதித்தார். வாரம் ஒருமுறை ஊருக்கே வந்து கற்றுத் தரவும்,



மாதக் கட்டணம் 200 ரூபாய்க்கும் சம்மதித்தார். என்னால் உண்மையில் நம்பவே முடியவில்லை.




ச.முத்துக்குமாரி

அவசர அவசரமாக மாணவர்களிடமும், பெற்றோர்களிடமும் பேசினேன். முதல் வகுப்புக்கான நாளும் தீர்மானித்தோம். பழைய அரசுப்பள்ளி அமைந்துள்ள இடத்தில் சிலம்பம் வகுப்பு நடத்த பஞ்சாயத்துத் தலைவரிடம் அனுமதி பெற்றேன்.

அக்டோபர் 25, 2020. முதல் நாள் சிலம்பம் வகுப்பு. வருவதாகச் சொன்ன மாணவர்கள் வருவார்களா என்று எனக்குப் பதற்றம். வழக்கம் போல பிஸ்கட் பாக்கெட் வாங்கிக்கொண்டேன். எனக்கு முன்னரே சிலம்பம் மாஸ்டர் வந்துவிட்டார். மாணவிகள் வழக்கம் போலக் குடிதண்ணீரைக் குடத்தில் எடுத்து வைத்தனர். ஒரு சில மாணவர்கள் இடத்தைச் சுத்தமாக்கினர்.

10 மணி ஆனது. 4 கி.மீ தூரத்திலிருந்தும் மாணவர்கள் நடந்து வந்தனர். மொத்தம் 55 மாணவர்கள் வகுப்பில் சேர்ந்தனர். அவர்களின் பெயர், தொலைபேசி எண் இணைத்து மாஸ்டர் எண்ணையும் சேர்த்து வாட்ஸ்அப் குழு ஒன்றை ஆரம்பித்தோம். மாஸ்டர் சிலம்பம் பற்றிய அறிமுகம் தந்தார். அடிப்படையாகச் சில உடற்பயிற்சிகள் சொல்லித் தந்தார்.

ஒவ்வொரு மாணவரின் உயரத்தையும் அளக்க ஆரம்பித்தோம். உயரத்திற்கு ஏற்ற சிலம்பக் கம்பு வாங்க வேண்டும். முதல் நாள் சிறப்பாக முடிந்தது.

அடுத்த வாரம் ஞாயிறு. இனிய அதிர்ச்சி காத்திருந்தது. மாஸ்டரும் நானும் வகுப்புக்குச் சென்றோம். சிலம்பக் கம்புகளை அதற்குள் வர வைத்திருந்தார். மாணவர்களுக்கு ஒரே உற்சாகம். ஆரவாரமாக மாஸ்டரை வரவேற்றனர். சந்தோஷமாக அவரவர்க்குரிய சிலம்பத்தை எடுத்துக்கொண்டனர்.

மாணவர்களை வயது, உயரம்வாரியாகக் குழு பிரித்துக்கொண்டார் மாஸ்டர். ஒவ்வொரு குழுவிற்கும் தனித்தனியாகப் பயிற்சி தந்தார். அன்றைய பயிற்சியின் முடிவில் பஞ்சாயத்துத் தலைவரின் இணையர் வந்து பயிற்சி வகுப்பைப் பார்வையிட்டார். சிலம்பம் கற்கும் மாணவர்கள் அனைவருக்கும் தன் சொந்த செலவில் யூனிபார்மாக டிஷர்ட் வழங்குவதாக அறிவித்தார். மாணவர்களுக்கு ஒரே சந்தோஷம். உடனே யூனிபார்முக்கு அளவு எடுக்க ஆரம்பித்தோம்.

அன்றைய வகுப்பு முடிந்து வீடு திரும்பினோம். ஒவ்வொரு முறை பொதுநலனுக்காகச் செய்யும் முயற்சியிலும், எதிர்பாராத உதவி வந்து சேர்ந்து விடுவதை அனுபவத்தில் எதிர்கொண்டே வருகிறேன். எங்கெங்கோ இருந்து உதவும் கைகள் நீளும்.

இந்த வீதி வகுப்பறை என்னுடையது மட்டுமா? குறைந்த கட்டணத்தில் வந்து கற்றுத் தரும் சிலம்பம் மாஸ்டருடையது; குடிதண்ணீர் எடுத்து வைக்கும் மாணவியுடையது; டி ஷர்ட் செலவை ஏற்ற நல் உள்ளம் கொண்டவரின் வகுப்பு இது.

பள்ளியை விட்டு வெளியில் வந்ததும் இது சமூகத்தின் வகுப்பறையானது.

**(தொடர்ந்து பேசுவோம்...)**

# நுழைவுத்தேர்வுகளின் தோல்வி!



கலை, அறிவியல், பொறியியல், சட்டம், மருத்துவம் என உயர்கல்விக்குள் அடியெடுத்து வைக்கும் மாணவர்களின் நுழைவுத்தேர்வு தொடங்கி, அங்கு பயிற்றுவிக்கும் உதவிப் பேராசிரியர் தேர்வு வரை அனைத்து வகையான நுழைவு மற்றும் தகுதித் தேர்வுகளை இந்திய அளவில் தேசியத் தேர்வு முகமை (National Testing Agency) எனும் நிறுவனமே நடத்துகிறது. இந்த நுழைவுத்தேர்வு முறையே தவறானது என்று பல்வேறு கல்வியியல் ஆய்வாளர்களும் கூறிவரும் நிலையில், இந்த நிறுவனம் நடத்துகிற தேர்வுகள் இன்றைக்குக் கடும் சர்ச்சையாகியுள்ளன. வினாத்தாள் கசிவு, ஆள் மாறாட்டம், 1,563 மாணவர்களுக்கு விதிமுறைகளை மீறிக் கருணை மதிப்பெண் வழங்கியது எனப் பல்வேறு முறைகேடுகள் நடைபெற்றுள்ளன. 2024 ஜூன் 18–ம் நாள் நடைபெற்ற உதவிப் பேராசிரியருக்கான தகுதித் தேர்வின் வினாத்தாள் விற்பனை செய்யப்பட்டது நிரூபணமான நிலையில், தேர்வு ரத்து செய்யப்பட்டு மீண்டும் நடத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீட் மற்றும் நெட் தேர்வுகளில் முறைகேடுகள் நடைபெறவில்லை என்று தேசியத் தேர்வு முகமை அறிவித்தாலும் நீட் வினாத்தாள் கசிந்த வழக்கில் பீகார் காவல்துறையால் வழக்குப்பதிவு செய்யப்பட்டு 13 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். தேசியத் தேர்வு முகமையின் தலைமை இயக்குநர் சுபோத்குமார் சிங் பதவி நீக்கப்பட்டு, ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ் அதிகாரியான பிரதீப்சிங் கரோலா நியமிக்கப்பட்டுள்ளார். நீட், நெட் ஆகிய இரண்டு தேர்வுகள் தொடர்பான வழக்குகளும் மத்திய புலனாய்வுத் துறையிடம் (CBI) ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இந்தத் தேர்வுகளை நடத்துகிற நிறுவனம், தேர்வுகளுக்கான வினாத்தாள் தயாரித்தல், தேர்வை நடத்துதல், முடிவுகளை வெளியிடுதல் போன்றவற்றிற்குக் கல்வித்துறையில் உள்ள வளமையர்களையே நம்பியுள்ளது. இந்த வளமையர்கள் எப்படித் தேர்வு செய்யப்படுகின்றனர்? அவர்கள் வினாத்தாள் எடுத்த பிறகு எங்கே செல்கின்றனர்? அவர்கள் யார் யார்? அவர்கள் மீதான நம்பகத்தன்மை என்ன? இவை எல்லாமே சந்தேகத்துக்குரியவை ஆகியுள்ளன.

இப்படியான தேர்வுகளை நடத்துகிற ஒட்டுமொத்த அதிகாரத்தையும் ஓர் அமைப்பிடம் குவித்துவிட்டு, தேசிய அளவில் ஒருங்கிணைத்து ஒரே மாதிரியான தேர்வை நடத்துவது இன்றைக்குச் சாத்தியமானதாகவும் நம்பகத்தன்மையானதாகவும் இல்லை என்பது நடைமுறையில் உறுதிசெய்யப்பட்டுள்ளது. அப்படியானால், 'ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் (UPSC) நடத்துகிற தேர்வு நேர்மையான முறையில் நடக்கிறதே' என்று தோன்றலாம். ஆனால், யுபிஎஸ்சி தேர்வை எழுதுவோரின் எண்ணிக்கையும், நீட், நெட் போன்ற தேர்வுகளை எழுதுவோரின் எண்ணிக்கையும் ஒப்பிட இயலாதது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அதேபோல மருத்துவ மாணவர் சேர்க்கையில் கோடிகளில் புரளும் நிதி மூலதனத்தையும் கணக்கில் கொள்ள வேண்டும். அதனாலேயே இந்தத் தேர்வு முறைகளில் பல்வேறு முறைகேடுகள் நிலவுகின்றன.

இப்படியான தேர்வு முறைகளே தவறு என்கிற நிலையில், ஒருவேளை அந்தத் தேர்வுகள் கட்டாயம் நடத்தப்பட்டே ஆக வேண்டுமென்றால், நேர்மையான முறையில் நடத்த அதை நடத்துகிற அமைப்பு மிகச்சிறிய அலகாக வட்டாரம் சார்ந்ததாக இருக்க வேண்டும். அப்பொழுதே ரகசியம்





தீர்வாக அமையும்.மாநில அரசு அல்லது மாநில அரசின் நிர்வாக அலகுகள் போன்றவை இந்தத் தேர்வுகளை நடத்தும்போதே ஒவ்வொரு மாநிலத்தின் வட்டார நிலைமைகள் உள்வாங்கப்பட்டு அதற்கேற்பத் தேர்வு நடைமுறைகளைச் சிறப்பாகச் செய்ய முடியும். அதுவும் தேவையைப் பொறுத்ததே! இந்தியா போன்ற பல்வேறு மொழி, இன மக்கள் வாழும் நாட்டில் கல்வித்துறையிலும் மாநிலங்களின் பிரதிநிதித்துவத்தை, குறிப்பாக இடஒதுக்கீட்டைக் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும். அப்போதே ஒன்றிய அரசு நடத்துகிற ஐ.ஐ.டி போன்ற கல்வி நிறுவனங்களில் எல்லா மாநில மற்றும் சமூக மாணவர்களுக்கான பிரதிநிதித்துவமும் உறுதிசெய்யப்படும்.

காக்கப்படும். அந்த அலகானது மாநில அலகாக அல்லது ஏதேனும் ஒரு பல்கலைக்கழக அல்லது கல்லூரி அலகாக சிறிய அளவில் இருக்க வேண்டும். தேர்வு போன்ற ரகசியப் பணிகளை மேற்கொள்ளும் அலகுகள் எந்த அளவிற்கு மிகச் சிறியதாக இருக்கிறதோ அப்பொழுதே அதன் செயலாக்கங்கள் உண்மைத்தன்மையுடன் பரவலான ஏற்பைப் பெறும். அதில் தவறுகள் நடந்தாலும் எளிதில் கண்டறிய முடியும்; மாற்றுகள் கொண்டு சரிசெய்யவும் முடியும்.

இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக, தமிழ்நாடு அரசு ஏற்கனவே மாநில அளவில் நடத்திவந்த உதவிப் பேராசிரியர் தகுதித்தேர்வைக் குறிப்பிடலாம். பாரதிதாசன் பல்கலைக்கழகம், அன்னை தெரசா பல்கலைக்கழகம் ஆகியவை நடத்திய தேர்வு முடிவுகளில் முறைகேடு நடைபெற்றதால் 2016ம் ஆண்டு முதல் இத்தேர்வு நிறுத்தி வைக்கப்பட்டது. இவற்றிலுமே வினாத்தாள் தயாரிப்பு,தேர்வை நடத்துதல் ஆகியவை முறையாக நடைபெற்றன. தேர்வு முடிவை வெளியிடும் கடைசி நிலையில்தான் முறைகேடு நடைபெற்றது 2016ல் கண்டுபிடிக்கப்பட்டது. இதனால் கடந்த 8 ஆண்டுகளாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இந்தத் தேர்வு, தீவிரமான ஆய்வுகளுக்குப் பின் இவ்வாண்டின் கடந்த மாதத்தில் நடைபெறும் என அறிவிப்பு வெளியிடப்பட்டு விண்ணப்பங்களும் பெறப்பட்டன. ஆனால் கடைசி நேரத்தில் அதிலுள்ள போதாமைகளைச் சுட்டிக்காட்டி, நாள் குறிப்பிடாமல் தேர்வு தள்ளிவைக்கப்பட்டுள்ளது.

நுழைவுத்தேர்வே தேவையில்லை என்கிற அடிப்படையைப் புரிந்துகொண்டு செயல்படுகிறவர்கள் கூட, ஓர் இடைக்கட்ட ஏற்பாடாக இதை ஒப்புக்கொண்டால் இவை அனைத்தையும் ஒழுங்குபடுத்திச் சாத்தியப்படுத்த, கல்வித்துறையை மாநிலப் பட்டியலுக்குக் கொண்டுவருவது ஒன்றே

நீட் தேர்வில் தகுதி முதன்மையாகக் கூறப்பட்டபோது, ‘ஏற்கனவே உலக அளவில் வெற்றிகரமாகச் சாதித்துக்கொண்டிருப்போர் அனைவரும் இந்தத் தகுதித் தேர்வின் அடிப்படையில்தான் தேர்ந்தெடுக்கப்பட்டனரா அல்லது தகுதி பெறாமல் போய் அவர்கள் தவறான மருத்துவம் செய்தனரா, அப்படித் தவறான மருத்துவம் செய்தார்கள் எனில் அதைப் பற்றிய தரவுகள் என்ன’ என்பது போன்ற தர்க்கங்கள் முன்வைக்கப்பட்டன. இன்றைக்கு வேறு வழியின்றிப் பெரும்பாலானோர் அந்தத் தகுதியைப் பெற்றாலும், அவர்களில் பயிற்சி மையங்களுக்கும் பயிலப்போகும் கல்லூரிகளுக்கும் அதிகக் கட்டணம் கொடுப்பவர்களுக்கே அந்த இடம் கிடைக்கிறது. பணம் செலுத்த இயலாதவர்கள் நீட் தேர்வில் தகுதி பெற்றாலும் மருத்துவப் படிப்பை மேற்கொள்ள முடியாமல் போய்விடுகிறது. ஆக, என்ன காரணங்களைச் சொல்லி இத்தேர்வுகள் கொண்டுவரப்பட்டனவோ அக்காரணங்களும் தோல்வியடைந்துள்ளன; தேர்வை நடத்தும் முறைகளும் தோல்வியுடைந்துள்ளன.

10+2+3 என்று வடிவமைக்கப்பட்டுள்ள கல்வித்தடத்தில், ‘நுழைவுத்தேர்வு’ என்கிற ‘காலம்’ (ஓராண்டோ, ஈராண்டோ) செயற்கையாகச் செருகப்பட்டுள்ளது. ‘முள் முளைக்கும்போதே புறத்தில் உள்ள ஏதோவொன்றையும் துளைக்கும் வடிவத்திலேயே தோன்றியுள்ளது’ என்பது போல நுழைவுத்தேர்வு தோன்றும்போதே மாணவர்களின், மாநிலங்களின் உரிமைப்பறிப்பிலிருந்து தோன்றியது என்பதை உணர்ந்து விரைந்து அடுத்தடுத்த மாற்றுகளைக் கண்டாக வேண்டும். ●

# எப்படி வேலை செய்வீர்கள் நீங்கள்?

ஒரு கடைக்குப் பொருட்கள் வாங்க வந்த இளைஞன் ஒருவன், கடை வாசலில் இருந்தபடி யாரிடமோ போனில் பேசினான். புன்சிரிப்பும் கனிவான பேச்சுமாக இருந்த அவன், கடைக்காரரின் கவனத்தை எளிதாகக் கவர்ந்தான். கடையில் கூட்டமில்லாத நேரம் என்பதால், அவன் என்ன பேசுகிறான் என்று ஒட்டுக் கேட்டார்.

''மேடம், உங்கள் பங்களா தோட்டத்தில் புல்தரையைச் செதுக்கும் வேலையை எனக்குத் தருவீர்களா? நான் பணத்துக்குக் கஷ்டப்படுகிறேன்'' என்றான் அவன்.

எதிர்முனையில் நிராகரித்து இருப்பார்கள் போல. "வேண்டாம் என்று சொல்லிவிடாதீர்கள் மேடம்! ஏற்கனவே அந்த வேலையைச் செய்பவர் வாங்குகிற கூலியில் எனக்குப் பாதியைக் கொடுத்தால் போதும்'' என்றான். அந்த முனையில் பேசுவதும் கடைக்காரருக்கு நன்றாகக் கேட்டது.

''வேண்டாம்பா... இப்போது இருப்பவரே நன்றாகத்தான் வேலை பார்க்கிறார்!"

''மேடம், எனக்கு வேலை கொடுத்தால் புல்தரையைச் செதுக்குவதோடு, நடைபாதை ஓரங்களையும் அழகுபடுத்தி, உங்கள் பங்களாவின் தோற்றத்தையே மாற்றிவிடுவேன்... ஒரே ஒருமுறை வாய்ப்புக் கொடுங்கள்!"

''ஸாரி! இப்போது எங்கள் வீட்டில் அதைச் செய்கிற பையனைப் பற்றி உனக்குத் தெரியாது. அவ்வளவு திறமையான வேலைக்காரன். அவனை மாற்றமுடியாது... போனை வைத்து விடு!"

எல்லாவற்றையும் கவனித்துக்கொண்டிருந்த கடைக்காரர் நெகிழ்ந்துவிட்டார். 'இவனுக்கு உதவ வேண்டும்' என்று நினைத்த அவர், "தம்பி, நான் உனக்கு வேலை தருகிறேன்" என்றார்.

இளைஞன் சிரித்தபடி, "வேண்டாம். ஏற்கனவே எனக்கு வேலை இருக்கிறது" என்றான்.

"ஆனால் சற்று முன்னர் நீ ஒரு வேலைக்காக போனில் கெஞ்சினாயே..."

"இல்லை சார், என் வேலையை நான் எப்படிச் செய்கிறேன் என்று பரிசோதிக்கவே போன் செய்தேன். நான் குரல் மாற்றிப் பேசிக் கொண்டிருந்தது என் முதலாளியம்மாவிடம்தான்! அவர்கள் மாற்றமுடியாது என்று சொன்ன பழைய வேலைக்காரன் நான்தான்" என்றான் அவன்.

எல்லா வேலைகளுக்கும் இப்படிப்பட்ட சுய பரிசோதனை அவசியம். அதுவே உங்கள் பலத்தையும் பலவீனத்தையும் உங்களுக்கு உணர்த்தும்! அது மட்டுமில்லை... பணியிடத்தில் உங்களுக்கு உருவாகும் பல சங்கடங்களை அது தடுக்கும்.

- நீங்கள் இந்த ஆண்டு மிகவும் கடினமாக உழைத்திருப்பீர்கள். ஆனால், ஏதோ நிர்வாகக் காரணங்களுக்காக 'இந்த ஆண்டு யாருக்கும் பதவி உயர்வு தருவதில்லை' என்று அலுவலகத்தில் முடிவெடுத்து இருப்பார்கள். 'இந்த வேலையில் நீடிக்கலாமா, வேறு எங்காவது போய்விடலாமா?' என்று பலரும் யோசனையில் இருப்பார்கள். ஆனால், 'நம் உழைப்பை இந்த அலுவலகம் அங்கீகரித்து இருக்கிறதா' என்று நீங்கள் சுய பரிசோதனை செய்து பாருங்கள். 'தாமதம் ஆனாலும், நமக்குக் கிடைக்க வேண்டியது கிடைக்கும்' என்ற நிம்மதியை அது உங்களுக்குக் கொடுக்கலாம்.

- அலுவலகத்தில் சக ஊழியர்களில் சிலர், உங்களுக்கு நெருங்கிய நண்பர்களாக இருப்பார்கள். திடீரென





உங்களுக்குப் பதவி உயர்வு கிடைத்து, அவர்கள் எல்லோரையும் நீங்கள் வேலை வாங்குகிற மாதிரி ஆகிவிடும். மிகவும் தர்மசங்கடமான சூழல் இது. அவர்கள் தவறு செய்யும்போது ஏதாவது கடிந்துகொண்டால், நட்பு முறிந்துவிடுமோ என்று தவிக்க நேரிடும். அதற்காக, அவர்கள் செய்யும் தவறுகளைக் கண்டும் காணாமல் இருந்தால், நீங்கள் உங்கள் வேலையில் சரியாக இல்லாததாக ஆகிவிடும். உங்களைச் சுய பரிசோதனை செய்துகொண்டு, நண்பர்களுக்கும் அதை உணர்த்திவிடுங்கள். அலுவலகத்துக்கு வெளியே நண்பர்களாக இருங்கள்; உள்ளே, வேலைக்கு ஏற்ற பொறுப்பில் இருங்கள்.


● உங்கள் வேலையில் ஏதோ ஒரு தவறு செய்துவிடுகிறீர்கள். உங்களையே அறியாமல் நேர்ந்த தவறு அது. அது உங்கள் கவனத்துக்கு வரும்போது, தவறுக்கு முழுப்பொறுப்பை நீங்கள் ஏற்றுக்கொள்ளுங்கள். வேறு யாரோ சொல்லி, அது உங்கள் மேலதிகாரிக்குத் தெரிவதைவிட, நீங்களே அதைச் சொல்லிவிடுவது நேர்மையானது. நிகழ்ந்த தவறுக்கு வருத்தம் தெரிவியுங்கள். அதைச் சரிசெய்யவும், இனி இப்படித் தவறுகள் நிகழாமல் இருக்கவும் வழிகளைக் கண்டுபிடித்து செயல்படுத்துங்கள்.

● ஏதோ தவறுக்காக, அலுவலகத்தில் எல்லோர் எதிரிலும் உங்களை மோசமான வார்த்தைகளால் திட்டிவிடுகிறார் உங்கள் மேலதிகாரி. நீங்களும் பதிலுக்கு அவர் போலவே கத்தி, நீங்கள் செய்ததை நியாயப்படுத்த நினைக்காதீர்கள். ஒவ்வொருவரின் பார்வையும் வேறு வேறானவை. உங்களுக்கு சாதாரணமாகத் தெரியும் அந்தத் தவறு, அவருக்கு மிகப்பெரிய தவறாகத் தெரியலாம். நிச்சயமாக, உங்களை அவமானப்படுத்த வேண்டும் என்பது அவரின் நோக்கமாக இருக்காது. தவறு நேர்ந்த விரக்தியில் வரும் பேச்சு அது. அமைதியாக அந்தச் சூழலிலிருந்து அகன்றுவிடுங்கள். எல்லாம் தணிந்ததும், தனியாக அவரைச் சந்தித்து உங்கள் உணர்வுகளை வெளிப்படுத்துங்கள்.

● உங்கள் உழைப்பை வேறொருவர் தன்னுடையதாகக் காட்டிப் பலனை அடைய நினைக்கிறார். மிகவும் சங்கடமான சூழல் இது. சின்ன விஷயத்துக்காக எந்த உள்நோக்கமும் இல்லாமல் செய்தால், பெருந்தன்மையோடு மன்னித்துவிடுங்கள். ஆனால், நீங்கள் செய்த மிகப்பெரிய ஒரு விஷயத்தைத் தன்னுடையது என உரிமை கொண்டாடினால், சும்மா இருக்காதீர்கள். ஆதாரங்களோடு நிர்வாகத்துக்குத் தெரியப்படுத்துங்கள். ஒரு குழுவாகச் செய்யும் வேலைகளுக்கான புகழும் பெருமையும் குழுவின் தலைவருக்கே போய்ச் சேரும். என்றாலும், தங்கள் குழுவில் இருக்கும் ஒவ்வொருவருக்கும் உரிய அங்கீகாரம் கிடைக்கச் செய்வது, குழுத் தலைவனின் கடமை. அதைச் செய்யாவிட்டால் உரிமையோடு அவரிடம் கேளுங்கள்.

● ஆபீஸில் உங்களைப் பற்றி ஏதோ ஒரு தவறான வதந்தி பரவுகிறது. அது உங்கள் காதுக்கும் வருகிறது என்றால், ஆத்திரப்பட்டு எதையாவது பேசி விடாதீர்கள். முதுகுக்குப் பின்னால் பேசப்படும் கிசுகிசுக்களை அலட்சியம் செய்வதுதான் புத்திசாலித்தனம். ஆனால், அது உங்கள் வேலைக்கே வேட்டு வைக்கும் விஷயமாக இருந்தால் சும்மா இருக்காதீர்கள். அதை ஆரம்பித்து வைத்தது யார் எனக் கண்டுபிடியுங்கள். அவரிடம் நேரில் சென்று வெளிப்படையாகப் பேசுங்கள். அவரை விட்டே எல்லோரிடமும் உண்மையைச் சொல்லச் சொல்லுங்கள். அவர் அதற்கு மறுத்தால், நிர்வாகத்தோடு பேசுங்கள். அதுதான் எல்லோருக்கும் நல்லது. ●


# கணிதக் கல்வியறிவு என்றால் என்ன?




பள்ளிகளில் கற்றுத்தரும் பாடங்களில் எது கடினம் என்றால், பலரும் ‘கணிதம்’ என்பார்கள். ஆனால், கணிதக் கல்வியறிவு ஒருவருக்கு இருந்தால், வாழ்வின் ஒவ்வொரு நொடியையும் மேம்பட்டதாக அது மாற்றும். ஒரு குழந்தை பள்ளிக்குள் நுழைந்து கணிதக் கல்வியறிவு பெற்று வருகின்றது எனில் என்னென்ன தெரிந்திருக்க வேண்டும்?

‘கணிதக் கல்வியறிவு (Mathematical Literacy) என்றால் என்ன’ என்று கணித ஆசிரியர்களிடம் வினவினால் வரும் பதில்கள் கொஞ்சம் அதிர்ச்சிதான் அளித்தன. பெரும்பாலும் அவை எண்களைப் பற்றியதாகவே இருந்தன. ஆனால், கணிதம் என்பது எண்கள் மட்டுமல்ல. எண்கள் ஒரு பிரதான அங்கம் வகிக்கின்றன என்பதை மறுப்பதற்கில்லை.

கணிதக்கல்வியறிவுஎதையெல்லாம்குறிக்கின்றது? எளிமையாகச் சொல்லவேண்டுமெனில் கணிதக் கருத்துகளை உள்வாங்குதல், ஒரு சிக்கலை ஒட்டிச் சிந்தித்தல், கணிதக் கருத்துகளைக் கொண்டு சிக்கல்களுக்குத் தீர்வுகளைக் காணுதல் அல்லது தீர்வினை நோக்கி நகர்தல். இவை எல்லாமே கணிதக் கல்வியறிவில் அடங்கும்.




விரிவாக மூன்று தலைப்புகளில் கணிதக் கல்வியறிவை அடக்குகின்றனர். அவை, இடம் சார்ந்த கல்வியறிவு, எண்ணறிவு, அளவு சார்ந்த கல்வியறிவு.

### இடம் சார்ந்த கல்வியறிவு:

இதைப் பற்றிப் பெரிதாக யாரும் கண்டுகொள்வதில்லை. ஆனால் தற்காலத்தில் அதுவே பிரதான திறனாகத் தேவைப்படுகிறது. இது உருவம் பற்றிய அறிவு மட்டுமல்ல, முப்பரிமாண உலகம், திசைகள், தூரம், அகலம் பற்றியதும்கூட! கூகுள் மேப்ஸ் பயன்படுத்துவது இன்று கட்டாயமாக உள்ளது. அல்லது அதுபோன்ற மற்ற செயலிகளையும்தான். திசையறிவு குறைவாக இருப்பதால் நிறைய பேர் சிக்கல்களைச் சந்திக்கின்றனர். எந்த இடத்தில் இருக்கின்றோம் என்ற தெளிவின்மையால் நம்பிக்கை குறைகிறது.

இதனைப் பாலர் வகுப்புகளில் இருந்தே தொடங்க வேண்டும் என்கின்றனர். உருவங்களை வைத்து அடுக்கி விளையாடும்போது இந்தத் திறன் வளர ஆரம்பிக்கும். வீட்டின் அமைப்பு, உயரம், பள்ளிக்கான தூரம், அதன் திசை ஆகியவற்றைப் பல்வேறு வகைகளில் குழந்தைகளுக்கு அறிமுகம் செய்வது இந்த அறிவை வளர்க்க உதவும். இடம் சார்ந்த கல்வியறிவைப் பெற்றிருப்பவர்கள் பயணங்களைத்

திட்டமிடுவதில், நிகழ்வுகளைத் திட்டமிடுவதில் கூடுதல் திறன் பெற்றவர்களாகவும் கச்சிதமாகச் செய்து முடிப்பவர்களாகவும் இருப்பார்கள். இதனைப் பற்றிய கவனம் இன்னும் அதிகரிக்க வேண்டும். தன் வீட்டிற்கு எப்படி வரவேண்டும் என போனில் சொல்வதே தற்காலக் குழந்தைகளுக்குச் சவாலாக உள்ளது. சுயமாகவும் எங்கும் செல்வதில்லை. இவை எல்லாமே இடம் சார்ந்த திறன்களுக்கு எதிர்த்திசையில் இருக்கின்றன.

### எண்ணறிவு:

எண்களைக் கையாளுதல், தரவுகளைத் தகவல்களாக மாற்றும் திறன், நிஜ உலகத்தில் எண்களையும் அதைச் சார்ந்த கருத்துகளை எப்படிச் செலுத்துவது என்பது எண்ணறிவு. இங்கே நிறைய இடர்களும் இருக்கின்றன. ஒரு குழந்தைக்கு 5+5 = 10 என எளிதாகப் போடத் தெரியும். (அதிலும் சிரமங்கள் இருக்கும் குழந்தைகள் உள்ளனர்!) அதே சமயத்தில், ‘என்னிடம் 10 ரூபாய் இருக்கிறது, உங்களிடம் 5 ரூபாய் இருக்கிறது. மொத்தம் எவ்வளவு ரூபாய் இருக்கு?’ எனக்கேட்டால் 10+5 செய்ய வேண்டுமா அல்லது 10–5 செய்ய வேண்டுமா எனக் குழப்பம் வருகிறது.

இது எளிமையான ஒரு கணக்கு. நிஜ உலகில் இன்னும் சிக்கலான கணக்குகள் வரும். கடைகளில் பணப்பரிமாற்றத்தின்போதே இதனைக் கவனிக்கலாம். துணைக்கு ஒரு கருவியைப் பயன்படுத்திச் சாமர்த்தியமாகத் தப்பிக்கின்றனர். ஆனால் அந்தக் கருவியை இயக்குவது நாமே, என்ன இயக்கப்போகின்றோம் என்றாவது தெரிய வேண்டும் அல்லவா? கருவிக்கான உள்ளீடுகளை நாமல்லவா தருகின்றோம்? அதற்கெல்லாம் அடிப்படையாக அமைவது எண்ணறிவு மட்டுமே.



### அளவு குறித்த அறிவு:

வெறும் எண்கள் மட்டுமே நிஜ உலகம் அல்லவே. அதனோடு அளவுகளும், மாறும் தன்மையும், நிச்சயமற்ற தன்மைகளும் உண்டு. இவை ஒன்றுடன் ஒன்று எப்படிப் பிணைந்துள்ளன என்பது பற்றிய அறிவு இது.

### கணிதத் திறன்களாகக் கருதப்படுபவை

**1. அடிப்படைக் கணித அறிவு மற்றும் வழிமுறைகள்:** எண்கள், நான்கு அடிப்படைக் கணிதச் செயல்பாடுகளான கூட்டல், கழித்தல், வகுத்தல் மற்றும் பெருக்கலில் நிபுணத்துவம். பின்னங்கள், தசமங்கள், சதவிகிதங்கள், இயற்கணிதம், வடிவியல் மற்றும் புள்ளியியல் போன்ற அடிப்படைக் கருத்துகளைப் புரிந்துகொள்வது.

**2. சிக்கலைத் தீர்ப்பது:** ஒரு சூழ்நிலையைப் பகுப்பாய்வு செய்து, சிக்கலைத் தீர்க்கத் தேவை எது? அது தொடர்புடைய கணிதக் கருத்துகளை அடையாளம் கண்டு, அவற்றைப் பயன்படுத்தினால் தீர்வை அடையலாம். இந்தத் திறன் மிக முக்கியமானது.

**3. மாதிரிகளை உருவாக்குதல்:** நிஜ உலக சூழ்நிலைகளைப் பிரதிநிதித்துவப்படுத்த, கணித மாதிரிகளை உருவாக்குதல் அவசியம். அதேபோல அதனைக்கொண்டு கணிப்புகள் செய்வதும், பரிசோதனைத் தீர்வுகளை உருவாக்க அவற்றைப் பயன்படுத்துவதும் இன்றியமையாத திறன்கள்.

**4. பகுப்பாய்வு மற்றும் தர்க்கம்:** சிக்கல்களை விமர்சனரீதியாகச் சிந்தித்தல், ஆதாரங்களிலிருந்து தர்க்கரீதியான முடிவுகளை (Logical decisions) எடுத்தல் மற்றும் கணித வாதங்களைப் பயன்படுத்தித் தீர்வுகளை நிலைநிறுத்துதல் அவசியமான திறனாகும்.

**5. தொடர்புத் திறன்:** சிக்கலை விளக்கவோ, சிக்கலுக்கான தீர்வுகளை முன்மொழியவோ, பொருத்தமான மொழி, குறியீடுகள் மற்றும் வரைபடங்கள், விளக்கப்படங்கள் போன்றவை அவசியம். அவற்றைப் பயன்படுத்திக் கணிதக் கருத்துகளைத் தெளிவாக விளக்குதல் முக்கியத் திறனாகும்.

கணிதத்திறன் என்பது இறுதியான விடையைக் கண்டறிவது மட்டும் இல்லை. அதனை நோக்கிய வழியில் சிந்திப்பதும், இருக்கின்ற வழிவகைகள் அனைத்தையும் அறிந்து வைத்திருப்பதும் பிரதானம். கணிதக் கருத்துகளைத் தாளில் தெரிந்து வைத்திருப்பது பெரிய சாதனை இல்லை. அவற்றைத் தினசரி சிக்கல்களில் செலுத்தித் தீர்வை நோக்கி நகர்வது கணிதத்தின் முக்கிய இலக்கு. ●

# மிங்க் விலங்கினமும் இரட்டை துரோகக் கதையும்!



நம் ஊர் கீரிப்பிள்ளை போன்ற ஒரு விலங்குதான் அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் இருக்கும் Mink என்னும் விலங்கு. இதன் உடலில் இருக்கும் முடியை (Fur) வைத்துச் செய்யப்பட்ட கோட்டுகள் மிகவும் தரமானதாகவும், மென்மையாகவும், அழகாகவும் இருக்குமாம்.

1960–களுக்குப் பிறகு இந்த Mink விலங்கை அமெரிக்கர்களும், ஐரோப்பியர்களும் பண்ணை விலங்கு போல வளர்க்க ஆரம்பித்தனர். ஒரு Mink Coat தயார் செய்ய 60 Minkகுகளைக் கொல்ல வேண்டும். இதன் ஆயுள் காலம் 11 ஆண்டுகள் என்றாலும், அது பிறந்து ஒரு வருடத்துக்குள் கொன்று அதன் தோலை எடுத்துக்கொள்வார்கள்.

கோவிட் சமயத்தில் தொற்றுநோய் இவற்றுக்கும் பரவவே, இது இன்னும் பிரச்னையாகும் என்று ஐரோப்பாவில் மட்டுமே ஒன்றரை கோடி விலங்குகளை ஒரே சமயத்தில் அழித்திருக்கிறார்கள். இந்த இரக்கமில்லாத படுகொலை எங்கும் பெரிய செய்தியாக மாறவே இல்லை.



இப்படி Mink–ஐ ஓராண்டு வளர்த்து அதன் தோல் முடியில் இருந்து கோட் தயாரிப்பதால் Mink Coat விலை உயர்ந்தது. இந்த கோட் பற்றி ஒரு கதை உண்டு. அது, Roald Dahl எழுதிய 'Mrs Bixby and the Colonel's Coat' சிறுகதை. இந்தக் கதையின் சுருக்கத்தைப் பார்ப்போம்.

மிஸ்டர் பிக்ஸ்பி ஒரு மருத்துவர். அவரது மனைவி மிஸஸ் பிக்ஸ்பி. இருவரும் அன்பான கணவன் மனைவி. மிஸஸ் பிக்ஸ்பி மாதம் ஒருமுறை தன் வயதான அத்தையைச் சில மணி நேரப் பயண தூரத்தில் இருக்கும் ஊருக்குச் சென்று பார்த்து வருவாள். இந்தப் பயணம் இயல்பானது என்று கணவன் மனத்தில் அவள் பதிய வைத்திருந்தாள்.

ஊருக்குச் செல்லும் மிஸஸ் பிக்ஸ்பி, தன் அத்தை வீட்டில் ஒரு மணி நேரம் மட்டுமே இருப்பாள். அதன்பிறகு வயதான பணக்காரர் ஒருவரின் பண்ணை வீட்டுக்குச் சென்று விடுவாள். அவருக்கும் மிஸஸ் பிக்ஸ்பிக்கும் தொடர்பு. இருவரும் பேசிப் பழகிவிட்டுப் பிறகு ஊருக்குத் திரும்பி, "அத்தையைப் பார்த்து வந்தேன்" என்று கணவனிடம் சொல்வாள்.

மிஸஸ் பிக்ஸ்பிக்கு கணவனைப் பிடிக்காது என்பதில்லை, பிடிக்கும். காரணம், கணவன் தன்னைத் தவிர யாரையும் பார்ப்பதில்லை, பழகுவதில்லை என்ற திருப்தி. அதே சமயம் தனக்குக் குடும்ப வாழ்க்கையில் ஏற்படும் வெறுமையை நீக்க மாதம் ஒருமுறை பணக்காரர் அன்பை உபயோகப்படுத்திக் கொள்வாள். இந்த ரகசிய நட்பால் வெறுமை நீக்கப்பட்டுப் புத்துணர்ச்சி கொண்டவள், மறுபடியும் கணவனிடம் பேரன்பாக இருப்பாள்.

இப்படி அவள் கணவனுக்கோ, உலகத்தாருக்கோ சந்தேகம் வராதபடி வாழ்ந்து வந்தாள். ஒரு கட்டத்தில் அந்தப் பணக்காரர், "நான் வேறு ஊருக்குச் செல்லப் போகிறேன். நாம் அடிக்கடி பார்க்க முடியாது" என்று



சொல்கிறார். மிஸஸ் பிக்ஸ்பியும் அதிகம் வருத்தப்படாமல், ''சரி'' என்று விடைபெற்று ஊருக்குப் போக ரயில் நிலையத்தில் காத்திருக்கிறாள்.

அப்போது பணக்காரரின் வேலையாள் ஒரு பார்சலைக் கொண்டுவந்து, "ஐயா உங்களுக்குக் கொடுத்த பரிசு" என்று கொடுக்கிறான். அதை ஆர்வமாகத் திறந்து பார்த்தவள் அதிர்ச்சியாகிறாள். அது, விலையுயர்ந்த Mink Coat.

அவள் கணவன் எவ்வளவு சம்பாதித்தாலும் அப்படி ஒரு கோட் வாங்கித் தர முடியாது. அது தனக்குக் கிடைத்ததால் துள்ளிக் குதிக்கிறாள். அதே சமயம் அவளுக்கு ஒரு கவலையும் வருகிறது. 'இதை என்னவென்று சொல்லி, கணவனிடம் காட்டுவேன். விலை கொடுத்து வாங்கியது என்று சொல்ல முடியாது. அத்தை கொடுத்தது என்றும் சொல்ல முடியாது. பணக்காரர் கொடுத்தது என்று சொன்னால் அவருடனான தொடர்பு கணவனுக்குத் தெரிந்துவிடும்' என்று மிஸஸ் பிக்ஸ்பி தவித்தாள்.

மனம் குழம்பிப் போய் இருக்கும்போது முட்டாள்தனமாகவோ, அறிவாளியாகவோ ஏதோ ஒரு ஐடியா வரும். அப்படி ஒரு ஐடியா மிஸஸ் பிக்ஸ்பிக்கு வந்தது. கோட்டை எடுத்துக்கொண்டு ஊருக்கு வந்தாள். ஓர் அடகுக்கடையில் அதை 50 டாலருக்கு அடகு வைத்தாள். அடகு ரசீதில் 'பெயர் போட வேண்டாம்' என்று சொல்லி வாங்கிக் கொண்டாள்.

மறுநாள் கணவன் ஆபீஸ் செல்லும்போது அதைக் கொடுத்தாள். "டியர்... நேற்று ரயில் நிலையத்தில் எனக்கு இது கிடைத்தது. 50 டாலர்தான். பெயரும் இல்லை. என்ன பொருள் என்று தெரியவில்லை. நீங்கள் பணத்தைக் கட்டி இந்தப் பொருளை நமதாக்கிக் கொள்ளுங்கள்" என்கிறாள். மிஸ்டர் பிக்ஸ்பியும் "நல்ல யோசனை" என்று அடகுச்சீட்டை வாங்கிக் கொண்டு கிளம்புகிறான்.

மதியம் வரை கணவனிடம் இருந்து தகவல் இல்லாத காரணத்தால் மிஸஸ் பிக்ஸ்பியே போன் செய்து விசாரிக்கிறாள். "சாரி, சொல்ல மறந்துட்டேன். 50 டாலர் கொடுத்து அதை வாங்கினேன். அது ஒரு விலையுயர்ந்த பருத்தி கோட். அது உனக்கு என்னோட பரிசு" என்றான் கணவன்.

மிஸஸ் பிக்ஸ்பிக்குக் குழப்பம். 'நான் அடகு வைத்தது Mink Coat. ஆனால் இவன் பருத்தி கோட் என்கிறான். என்ன நடந்தது' என்று திகைக்கிறாள். அடகுக் கடைக்காரனைச் சந்தேகிக்கிறாள். பொறுக்க முடியாமல் கணவனின் ஆபீஸுக்கே செல்கிறாள்.

கணவன் உடனே, "இதைப் பாரு, பருத்தி கோட். அழகா இருக்கில்ல'' என்று காட்ட, அவளுக்குத் திருடனுக்குத் தேள் கொட்டிய உணர்வு. என் Mink Coat என்னவாயிற்று? எப்படி இந்தச் சாதாரண பருத்தி கோட் வந்தது?

இப்படிக் குழப்பத்துடன் கணவன் அறையில் அமர்ந்திருக்கும்போது, கணவனின் உதவியாளராக இருக்கும் இளம்பெண் அந்த அறைக்குள் நுழைந்து, "வாங்க மிஸஸ் பிக்ஸ்பி" என்று இன்முகத்தோடு வரவேற்றாள். அவளுக்குப் பதில் வணக்கம் சொல்லும்போதுதான் மிஸஸ் பிக்ஸ்பி கவனித்தாள், பணக்காரர் தனக்குக் கொடுத்த, தான் அடகுக்கடையில் வைத்த Mink Coat–ஐ கணவனுடைய உதவியாளர் இளம்பெண் அணிந்திருந்தாள்.

Mink Coat பறிபோனது ஒரு பக்கம், அதைச் சொன்னால் பணக்காரருடன் தான் வைத்திருக்கும் ரகசிய அன்பு வெளிப்பட்டுவிடும் என்ற பயம் ஒரு புறம், இத்தனை நாள் நல்லவன் என்று நினைத்த கணவன் இந்த உதவியாளரிடம் தொடர்பு வைத்திருக்கிறானே என்ற எரிச்சல் இன்னொரு புறம், தான் போட்ட திட்டம் வீணாகிவிட்டதே என்ற அவமானம் இன்னொரு புறம் என மிஸஸ் பிக்ஸ்பின் முகம் விநோதமான பாவனையை வெளிப்படுத்தியது.

**– விஜயபாஸ்கர் விஜய்**

பழங்காலத்தில் ஒலிம்பிக் போட்டிகள் கி.மு 776-ம் ஆண்டு முதன்முதலில் கிரேக்க நாட்டில் தொடங்கியது. அப்போது அது ஆறு மாதங்கள் நடைபெறுமாம். 400 ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு மன்னர் அதைத் தடை செய்தார். நவீன ஒலிம்பிக் போட்டிகள் 1896-ம் ஆண்டு மீண்டும் தொடங்கின.

முதல் உலகப்போரால் 1916-ம் ஆண்டும், இரண்டாம் உலகப்போரால் 1940, 44-ம் ஆண்டுகளிலும் ஒலிம்பிக்ஸ் நடக்கவில்லை. உலகில் அமைதி நிலவும்போதுதான் போட்டிகளை நடத்தவேண்டும் என்பது ஒலிம்பிக் கமிட்டியின் லட்சியம்.

1900-ம் ஆண்டில் நடந்த இரண்டாவது ஒலிம்பிக் போட்டியிலேயே டென்னிஸ், கோல்ஃப், வில்வித்தை ஆகிய மூன்று போட்டிகளில் மட்டும் பெண்களுக்குப் பிரிவுகள் தொடங்கப்பட்டன. 1936 ஒலிம்பிக்கில் பல பிரிவுகளில் அவர்களுக்கும் போட்டிகள் நடத்தப்பட்டன.



இந்தியாவில் ஒலிம்பிக் போட்டிகள் நடத்த அனுமதிகேட்டு இந்திய ஒலிம்பிக் கழகம் பேசி வருகிறது. 2036-ம் ஆண்டு அகமதாபாத் நகரில் இந்தியா இதை நடத்துவதற்கு வாய்ப்பிருக்கிறது. அப்போது ஒலிம்பிக்ஸில் கபடி சேர்க்கப்படக்கூடும்.



# ஒலிம்பிக் உலகம்

1936-ம் ஆண்டு பெர்லின் ஒலிம்பிக்ஸில்தான் டிவி நேரடி ஒளிபரப்பு அறிமுகமானது. நகர் முழுக்க 25 இடங்களில் பெரிய திரைகளைப் பொருத்தி, மக்கள் ரசிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டது.



1896-ல் நடை
போட்டியில் அ
சிலி, 11 ஐரோப்
மட்டுமே பங்கே
மேற்பட்ட நாடு

ஒலிம்பிக் தங்கப்பதக்க
ஆண்டு வரை முழுக்க தா
செய்யப்பட்டது. நிறைய
சேர்க்கப்பட்டு செலவு அ
இப்போது அதில் 6 கிராம்
மேல்பூச்சை மட்டுமே செய்

# ஒலிம்பிக் உலகம்

1900-ம் ஆண்டு
இரண்டாவது
போட்டியிலே
பதக்கம் வென்
இந்தியரான
பிரிட்சர்டு இரன
பதக்கங்களை

ஒலிம்பிக் போட்டியை நடத்து
விரும்பும் ஏதாவதொரு போ
புதிதாகச் சேர்த்துக் கொள்
விதி இருக்கிறது. அதன்
ஆண்டு அமெரிக்காவின் லாஸ
நடைபெறும் ஒலிம்பிக்கில்
சேர்க்கப்படுகிறது.

1964-ல் டோக்கியோவில்
ஆசியக் கண்டத்தில் நடந்த
போட்டி. இரண்டாம் உலகப்
ஜப்பான், தான் மீண்டு வந்த
அறிவிக்க இந்தப் போட்டி

டபெற்ற முதல் ஒலிம்பிக்
மெரிக்கா, ஆஸ்திரேலியா,
பியநாடுகள் என 14 நாடுகள்
கற்றன. இன்று 200–க்கும்
கள் பங்கேற்கின்றன.



புராதன ஒலிம்பிக்ஸின் நினைவாகவே இப்போதும் ஒலிம்பிக் தீபம் ஏற்றும் வழக்கம் இருக்கிறது. கிரீஸ் நாட்டின் ஒலிம்பியா நகரில்தான் இப்போதும் இதை ஏற்றுகிறார்கள். அங்கிருந்து அது உலகம் முழுக்கப் பயணம் செய்யும்.

கம் 1912–ம்
ங்கத்தில்தான்
போட்டிகள்
திகமானதால்
ம் தங்கத்தால்
கிறார்கள்.





# ஒலிம்பிக் உலகம்

பாரீஸ் ஒலிம்பிக்ஸில் வழங்கப்படும் ஒவ்வொரு பதக்கத்திலும் புகழ்பெற்ற ஈபிள் டவர் செய்யப் பயன்படுத்திய இரும்பிலிருந்து கொஞ்சம் சேர்த்திருக்கிறார்கள்.



டில் நடைபெற்ற
து ஒலிம்பிக்
யே இந்தியா
றது. பிரிட்டிஷ்
ா நார்மன்
ண்டு வெள்ளிப்
வென்றார்.



இந்தியாவின் ஒலிம்பிக் சாதனைகள் ஹாக்கியில்தான். 1928 முதல் 1956 வரை தொடர்ச்சியாக இந்தியா ஆறுமுறை தங்கம் வென்றது. மொத்தமாக 8 தங்கம், ஒரு வெள்ளி, 3 வெண்கலம் வாங்கியிருக்கிறது.



ம் நாடு, தான்
பாட்டியையும்
ளலாம் என்று
படி 2028–ம்
ஸ் ஏஞ்சல்ஸில்
ம கிரிக்கெட்





# ஒலிம்பிக் உலகம்

2021 வரை இந்தியாவுக்காக தங்கம் வென்ற இரண்டு தனிநபர்கள், துப்பாக்கி சுடுதலில் அபினவ் பிந்த்ரா, ஈட்டி எறிதலில் நீரஜ் சோப்ரா.



நடந்ததுதான்
முதல் ஒலிம்பிக்
போரில் சீரழிந்த
தை உலகுக்கு
ய நடத்தியது.



ஒலிம்பிக்கில் டென்னிஸ் 1924 வரை விளையாடப்பட்டது. அதன்பிறகு 1988–ம் ஆண்டுதான் டென்னிஸ் விளையாட்டுக்கு மீண்டும் அனுமதி கிடைத்தது. இல்லாவிட்டால், 1996 ஒலிம்பிக்ஸில் லியாண்டர் பயஸ் ஜெயித்துக் கொடுத்த ஒரே ஒரு வெண்கலமும் இந்தியாவுக்கு இல்லாமல் போயிருக்கும்.



மருத்துவம்

# சின்ன விஷயம் இல்லை சிறுநீர்ப்பாதைத் தொற்று!

ஆண்களைவிடப் பெண்களை அதிகம் பாதிக்கும் பிரச்னைகளில் ஒன்று, சிறுநீர்ப்பாதைத் தொற்று. உடலின் கழிவுகளை வெளியேற்றும் மிக முக்கியமான அமைப்பு சிறுநீரக மண்டலம். கிட்னி எனப்படும் சிறுநீரகம், சிறுநீர்ப்பை, சிறுநீர்க் குழாய் ஆகிய அனைத்தும் இணைந்த பகுதியைச் சிறுநீரக மண்டலம் என்பார்கள். இதில் எங்கு நோய்த்தொற்று ஏற்பட்டாலும், அது 'யு.டி.ஐ.' (யூரினரி டிராக்ட் இன்ஃபெக்‌ஷன்) எனப்படும்.


பெரும்பாலும் இந்தத் தொற்றுக்கு பாக்டீரியாக்களே காரணம். அடிக்கடி தொற்றும் இந்த நோய், எப்போதும் அறிகுறிகள் எதையும் உணர்த்துவதில்லை என்பதுதான் பிரச்னை. ஒருமுறை சிறுநீர்ப்பாதைத் தொற்று தாக்கினால், அவர்களுக்கு ஆறு மாதங்களுக்குள் திரும்பவும் இது தொற்றும் அபாயம் 60 சதவிகிதம் உள்ளது. இந்த நோய்த்தொற்று சில நாட்களுக்கு மட்டுமே இருக்கலாம்; அல்லது நீண்ட காலம் இருந்து வதைக்கலாம். ஆனால், சிறுநீர்ப் பாதையைத் தாண்டி இது சிறுநீரகங்களுக்குப் பரவினால் ஆபத்து.



பெண்களுக்குச் சிறுநீர்க் குழாயின் நீளம் குறைவு என்பதால், அவர்களுக்கே சிறுநீர்த் தொற்று தாக்கும் அபாயம் அதிகம். குடும்பக் கட்டுப்பாடு முயற்சியாக 'காப்பர் டி' அணிந்துகொள்ளும் பெண்களுக்கு இந்த அபாயம் இன்னும் அதிகம். மெனோபாஸ் பருவத்துக்குப் பிறகு இந்த நோய் தாக்கும் அபாயம் இன்னும் அதிகரிக்கிறது. முதுமைக்காலத்தில் எல்லோருக்கும் இது வரலாம். சிறுநீரகக் கல், ஆண்களுக்கு ஏற்படும் புரோஸ்டேட் சுரப்பி வீக்கம் போன்றவையும் இந்தத் தொற்று தாக்கும் ஆபத்தை அதிகரிக்கிறது. நிறைய முதியோர்கள் சிறுநீர்ப்பாதைத் தொற்றால் அவதிப்படுவதை, அவர்களின் குடும்பத்தினர் மனநிலைப் பாதிப்பாகக் குழப்பிக் கொள்வார்கள். அப்படி அவர்களை அவஸ்தைப்படுத்திவிடும் இது!

### அறிகுறிகள் என்னென்ன?

- இப்போதுதான் ஒய்வறை சென்று சிறுநீர்ப்பை காலியான சில நிமிடங்களிலேயே மீண்டும் அவசரமாகச் சிறுநீர் கழிக்க வேண்டும் என உந்துதல் ஏற்படுவது
- சிறுநீர் வெளியேற்றும்போது எரிச்சல் அல்லது வலி ஏற்படுவது
- அடிக்கடி கொஞ்சம் கொஞ்சமாகச் சிறுநீர் கழிப்பது
- அதிகக் கடுமை இல்லாத லேசான ஜுரம்
- சிறுநீரில் ரத்தமும் கலந்து வெளியேறுவது
- சிறுநீரில் இயல்புக்கு மாறான துர்நாற்றம்
- அடிவயிற்றில் வலி
- ஆசனவாயில் வலி
- அடிவயிறோ அல்லது அடிமுதுகோ அடிக்கடி பிடித்துக்கொள்வது
- தாம்பத்திய உறவின்போது கடுமையான வலி



**ஒருவேளை சிறுநீரகத்துக்கும் தொற்று பரவியிருந்தால்?**

- எந்த வேலையையும் இயல்பாகச் செய்யமுடியாதபடி கடும் சோர்வு ஏற்படுவது
- குமட்டல் மற்றும் வாந்தி
- நடுக்கத்தோடு கடுமையான ஜுரம்
- இரவில் திடீரென அதிகம் வியர்ப்பது
- அடிவயிற்றில் தாங்க முடியாத வலி
- வயிற்றுப்பகுதி சிவந்திருப்பது

**யார் யாருக்கு ஆபத்து அதிகம்?**

- நீரிழிவு நோய் உள்ளவர்கள்
- கர்ப்பிணிகள்
- தோலில் அதிக அலர்ஜி ஏற்படுத்தும் அழகுப்பொருட்களைப் பயன்படுத்துபவர்கள்
- ஆன்ட்டிபயாடிக் மாத்திரைகள் அதிகம் சாப்பிடுபவர்கள்
- நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக உள்ளவர்கள்
- சிறுநீர்ப் பாதையில் அடைப்போ, இயல்புக்கு மாறான பிரச்னைகளோ உள்ளவர்கள்

**தற்காப்பும் வீட்டுச் சிகிச்சையும்**

- போதுமான அளவு தண்ணீர் குடியுங்கள்
- சிறுநீர்ப்பாதைத் தொற்று இருப்பதாக உங்களுக்கு சந்தேகம் எழுந்தால், காபி, மது மற்றும் செயற்கைக் குளிர்பானங்களைத் தவிர்த்துவிடுங்கள்
- சுடுதண்ணீரில் துண்டை நனைத்து அதை அடிவயிற்றில் வைத்து ஒற்றி எடுங்கள். சிறுநீர்ப்பையின் அழுத்தம் குறையும்
- இயற்கை உபாதைக்குப் பிறகு முன்புறம் இருந்து பின்புறமாகக் கழுவுங்கள்
- தாம்பத்திய உறவுக்குப் பிறகு முழுமையாக சிறுநீர்ப்பையைக் காலியாக்கிவிட்டுப் போதுமான தண்ணீர் குடியுங்கள்
- நார்ச்சத்துள்ள உணவுகளை அதிகம் சாப்பிடுங்கள்
- கிரான்பெர்ரி ஜூஸ் இதற்குச் சிறந்த தற்காப்பு மருந்தாகப் பயன்படுவதாக ஆய்வுகள் சொல்கின்றன. எனினும் அறுவை சிகிச்சைக்குப் பிறகு ரத்தத்தை உறையவிடாமல் தடுக்கும் மாத்திரைகளைச் சாப்பிடுபவர்கள் இந்த ஜூஸ் குடிக்கக்கூடாது
- முறையாக உடற்பயிற்சி செய்யுங்கள்
- இறைச்சி, அதிக கொழுப்புள்ள உணவுகள், துரித உணவுகள், சர்க்கரை அதிகம் சேர்த்த உணவுகளைத் தவிர்த்துவிடுங்கள்

**எப்போது டாக்டரிடம் போக வேண்டும்?**

- முதுகிலும் வயிற்றின் பக்கங்களிலும் இடுப்பிலும் கடுமையான வலி ஏற்பட்டால்
- ஜுரம் வந்து, நடுக்கம் குறையாமல் உடல் ஜில்லிட்டால்
- வாந்தி நிற்காமல் இருந்தால் ●

# கொஞ்சம் வாலு... வேண்டும் நிறைய அக்கறை!



‘என் பிள்ளை ரொம்ப சமத்து. எல்லா விளையாட்டிலும் சுட்டித்தனம்’ என மகிழும் அம்மாக்கள்கூட, அவர்களின் படிப்பு என்று வரும்போது கவலைப்படுகின்றனர். இந்த வகைக் குழந்தைகள் ADHD குழந்தைகள். அதாவது கவனக்குறைவு மற்றும் அதிகபட்ச துறுதுறுப்பு இரண்டும் சேர்ந்து எந்த விஷயத்திலும் ஆழமான ஈடுபாட்டைக் காட்ட முடியாத நிலையை உருவாக்குகிறது.

‘‘மூளை நரம்பில் ஏற்படும் ஒருவகையான மாற்றமே இதற்குக் காரணம். மரபுரீதியாகவும் இந்தப் பிரச்னை ஏற்படலாம். இதைக் குழந்தைப் பருவத்தில் கண்டறிந்து சரி செய்வதன் மூலம் படிப்பில் நல்ல முன்னேற்றத்தை ஏற்படுத்த முடியும்’’ என்கிறார் ஹெலிக்ஸ் ஓப்பன் ஸ்கூல் தாளாளர் மற்றும் கற்றல் குறைபாடுள்ள குழந்தைகளுக்கான சிறப்புப் பயிற்சியாளர் தேவிப்பிரியா. இதுகுறித்து மேலும் அவர் விரிவாக விளக்குகிறார்.

ஏ.டி.ஹெச்.டி. பாதிப்புள்ள குழந்தைகள் மிகவும் குறும்பாக இருப்பார்கள். வகுப்பறையில் ஐந்து நிமிடங்கள்கூட அமைதியாக அமர்ந்து அவர்களால் பாடத்தைக் கவனிக்க முடியாது. வெளியில் வேறு எதையாவது வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பது, பாடம் நடத்தும்போது சம்பந்தம் இல்லாத கேள்விகள் கேட்பது என இவர்கள் ஆசிரியர் தனிக்கவனம் செலுத்த வேண்டிய குழந்தையாக இருப்பதைப் பார்க்கலாம். இவர்களுக்கு இந்தப் பாதிப்பு உள்ளது என்பதை வீடு, வகுப்பறை மற்றும் விளையாடும் இடங்களில் தெரிந்துகொள்ளலாம்.

வகுப்பில் அடுத்தநாள் செய்ய வேண்டிய வேலைகள் பற்றிச் சொல்லும்போது கவனிக்காமல் விட்டு, அடுத்த நாள் எதையும் செய்யாமல் வருவார்கள். வகுப்பிற்கு எடுத்து வர வேண்டிய பொருட்களில் முக்கியமானதை மறந்துவிட்டு வருவார்கள். வகுப்பறை மற்றும் வீடு என இரண்டு இடங்களிலும் இவர்களால் ஆர்கனைஸ்டாக இருக்க முடியாது. இவர்களின் வொர்க்கிங் மெமரி பாதிக்கப்படுவதே இதற்கு முக்கியக் காரணம். இதனால் எந்த விஷயத்தையும் கோர்வையாக நினைவில் வைத்துச் செய்ய முடியாது.




**தேவிப்பிரியா**

இவர்கள் சில நேரங்களில் அதிக உணர்ச்சிவசப்பட்டுச் செயல்படுவதைப் பார்க்கலாம். ஒரு இடத்தில் ஒரே மாதிரியான நிலையில் நீண்ட நேரம் இருக்க முடியாது. காத்திருக்கும் பொறுமை இருக்காது. ஏதாவது ஒரு சத்தம் கேட்டால் அங்கே என்ன நடந்திருக்கும் எனத் தெரிந்துகொள்ள ஓடுவார்கள். தான் கேட்டவுடன் கிடைக்க வேண்டும், நினைத்தவுடன் எதுவும் நடக்க வேண்டும்

என்றும் எதிர்பார்க்கலாம். தனது நடவடிக்கைகளால் ஏற்படும் பின்விளைவுகள் பற்றி யோசிக்க மாட்டார்கள். இவர்களுக்கு அடிக்கடி மூட் ஸ்விங் ஏற்படும். பள்ளியிலும் வீட்டிலும் நிதானம் இல்லாமல் எந்த வேலையும் செய்வதால் இவர்களிடம் பர்ஃபெக்ஷனை எதிர்பார்க்க முடியாது. எப்போதும் எதையாவது மறந்து வைத்துவிட்டுத் தேடிக் கொண்டிருப்பார்கள்.



நட்பு போன்ற உறவுகளைப் பின்பற்றுவதிலும் சிக்கல் இருக்கும். நண்பர்களிடம் எதைச் சொல்லலாம், எதைச் சொல்லக்கூடாது என்பதில் தெளிவற்று இருப்பார்கள். ஒருவரின் குற்றத்தை முகத்திற்கு நேராகச் சொல்லிவிடுவதால் இவர்களோடு நட்பைத் தொடர யாரும் விரும்புவதில்லை. இவர்களால் பிரச்னை வந்துவிடும் என்று நகர்ந்து விடுகின்றனர். இவர்களைப் பிரச்னைக்குரியவர்களாக மற்றவர்கள் பார்க்கும் நிலை ஏற்படுகிறது.

அன்றாடம் பயன்படுத்திய பொருட்களைக்கூட மறப்பார்கள். அதே சூழல் மறுபடியும் வரும்போதுகூட ‘அந்தப் பொருளைப் பயன்படுத்தலாம்’ என்பதை நினைவுக்குக் கொண்டுவர முடியாது. தன்னைச்சுற்றிநடக்கும்சம்பவங்களையும் மறப்பார்கள். இதனால், ஏற்கனவே நடந்தவற்றைக்கூடப் புதிது போலக் கேட்பது, எதிலும் ஒட்டாமல் தன்னைத் தனிப்பிறவியாக நினைத்துக்கொண்டு வாழ்வது, அடிக்கடி கோபம் கொண்டு அழுவது, எரிச்சலடைவது என இருக்கலாம். வரவு செலவு, எந்த வேலையை எப்போது முடிக்க வேண்டும் என்பது உள்ளிட்ட எந்த முக்கியமான விஷயத்தையும் இவர்களால் நினைவில் வைத்துச் செய்ய முடியாது. அன்றாட வாழ்க்கை தொடர்பான விஷயங்களைப் பின்பற்றுவதில் பிரச்னைகள் இருப்பது போல, கற்றலிலும் பிரச்னைகள் தொடரும்.



வகுப்பில் பாடம் நடத்தும்போது தொடர்ந்து கவனிக்க முடியாமல் போவது, ஒரு கான்செப்ட்டை அதன் அர்த்தம் உணர்ந்து புரிந்துகொண்டு வெளிப்படுத்துவது போன்றவற்றில் சிக்கல் இருக்கும். இவர்களுக்குத் தசைச் செயல்பாடுகளிலும் பிரச்னை இருக்கலாம். இதனால் இவர்களின் கையெழுத்து அழகாக இருக்காது. நேராக எழுதுவதில் சிக்கல் உண்டாகும். கோர்வையாக ஒரு விஷயத்தை எழுத முடியாமல் தவிப்பார்கள்.

ஹைப்பர் ஆக்டிவாக இருப்பதில் குழந்தைகள் மூன்று நிலைகளில் உள்ளனர். ஆக்குபேஷனல் தெரபிஸ்டை அணுகி இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காணலாம். இவர்களது ஐக்யூ லெவல் 130ஐத் தாண்டவும் வாய்ப்புள்ளது. கவனச்சிதறலால் இவர்கள் கற்றல் பிரச்னைகளைச் சந்திக்கின்றனர். குழந்தை வளர்ப்பில்தான் அவர்கள் தங்களது அடிப்படை வேலைகளை நினைவில் வைத்து முறைப்படி செய்வதற்குப் பழக்க வேண்டும்.

மூளையில் நடக்கும் ரசாயன மாற்றங்களைச் சரி செய்ய மருத்துவரின் ஆலோசனை பெற்று மருந்துகள் எடுத்துக்கொள்ளலாம். மூளையை அதிகளவில் தூண்டும் ரசாயனம் கலக்கப்பட்ட உணவுகளை இக்குழந்தைகள் தவிர்ப்பது நல்லது. கற்றலிலும் சின்னச் சின்ன பயிற்சிகள் மூலம் இவர்களை மேம்படுத்தலாம்.

மனதை ஒருமுகப்படுத்துவதற்கான உடல் மற்றும் மனப்பயிற்சிகள் இவர்களுக்கு அவசியம். பிகேவியரல் தெரபி எடுத்துக்கொள்வதும் இவர்களிடம் நல்ல முன்னேற்றத்தை உருவாக்கும். இவர்களின் குறைகளைப் பெரிதுபடுத்தாமல் சின்னச் சின்ன நிறைகளைக் கண்டறிந்து அடிக்கடி பாராட்ட வேண்டும். பாராட்டுதல் அவர்களுக்கு தன்னம்பிக்கை அளிக்கும்.கற்றலில் உண்டாகும் குறைகளைச் சரி செய்ய தண்டனைக்குப் பதிலாகச் சில விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டியது அவசியம்.

குழந்தைக்கு ஏ.டி.ஹெச்.டி. பிரச்னை இருப்பதை 8 வயதுக்குள் கண்டறிய முடியும். 10 முதல் 15 வயதுக்குள் இதனைச் சரி செய்வதற்கான முயற்சிகளைப் பெற்றோர் எடுக்க வேண்டும். கண்டுகொள்ளாமல் விட்டால் இக்குழந்தைகள் எதிர்மறையான செயல்களில் ஈடுபட வாய்ப்புள்ளது. ஆரம்பத்திலேயே கண்டறிந்து ஏ.டி.ஹெச்.டி. குழந்தைகளுக்குக் கூடுதல் கவனிப்பு அளிப்பதுடன், அவர்களைச் சரி செய்வதற்கான சிகிச்சைகளும் தர வேண்டும்.

**– யாழ் ஸ்ரீதேவி**



# உதவியை நீட்டிய உன்னதக் கரம்!

ஒரு விளக்கு அணையப் போகும்போது, ஓடிவந்து திரியை மெலிதாகத் தூண்டிவிட்டு, மறுபடியும் விளக்கை எரிய வைக்கும் அந்தத் தருணத்தை விளக்குகளால் மறக்க முடியாது.

சமீபத்தில் ஆட்டோ ஒன்றில் சவாரி சென்றபோது, அந்த ஆட்டோ டிரைவர் இளைஞரிடம் பேசிக்கொண்டிருந்தேன். "சின்ன வயசா இருக்கீங்க. படிக்கலையா... ஆட்டோ ஓட்டுறீங்க'' என்றேன்.

"ஆமாண்ணா... எனக்கு 21 வயசு முடியப் போகுது. நான் இப்ப படிச்சிட்டுதான் இருக்கேன். காலேஜ் மூணாவது வருஷம். படிச்சிக்கிட்டே பார்ட் டைமா ஆட்டோ ஓட்டுறேன்" என்றார்.

எனக்கு ஆச்சர்யம். அவரிடம் 'சாரி' கேட்டேன். "நார்மலா, 20 வயசுல படிக்காம கல்யாணம் ஆகி, 24 வயசுல இரண்டு குழந்தைங்கள வைச்சிக்கிட்டு தடுமாறுகிற நிறைய ஆட்டோ டிரைவர்களை இங்க பார்ப்பேன். அதை வச்சி கேட்டுட்டேன்" என்றேன். சென்னை மாநகரின் மையப்பகுதியில் இருக்கும் குடியிருப்பு ஒன்றில் வசிக்கும் இளைஞர் அவர்.

"என்ன படிப்பு படிக்கிறீங்க?" என்று கேட்டேன்.

"மாஸ் மீடியா!"

"எனக்கு நீங்க பிளஸ் 2 முடிச்சு எப்படி காலேஜ் சேர்ந்தீங்கங்கிற விவரம் தெரிஞ்சே ஆகணும்!"

அவர் சிரித்தார். சொல்ல ஆரம்பித்தார். ''எங்க வீட்ல அப்பாவும் கூலிதான்... அம்மாவும் கூலிதான்ணா. எங்க ஏரியாவுல எல்லாம் பையன் பத்தாங் கிளாஸ் முடிச்ச உடனே வீட்டுக்கு மாசம் ஐயாயிரமோ, பத்தாயிரமோ கொடுத்திரணும்..."

"அது என்ன ரூல்ஸ்?"

"அவன் அதோட தனிண்ணா... நான் பிளஸ் 2 படிக்கிறதுக்கே திட்டுனாங்க!"

"ம்ம்ம்... நீங்க பிளஸ் 2–வுல எவ்ளோ மார்க்?"

"ஜஸ்ட் பாஸ். மார்க் ரொம்பக் குறைவு. எனக்கு கவர்மென்ட் காலேஜ்ல கூட சீட் கிடைக்காதுன்னு தெரியும். ஏரியா அண்ணன் ஒருத்தர்கிட்ட சொல்லி ஒரு கான்டிராக்ட் வேலைக்குப் போக ஆரம்பிச்சிட்டேன். ஹெல்பர் வேலை மாதிரி. சம்பளம் 12 ஆயிரம் தர்ரேன்னு சொன்னாங்க."

"ம்ம்ம்..."

"ஒரு வாரம் போயிருப்பேன். அப்போ பக்கத்து வீட்டுக்கு ஒரு அக்கா வந்தாங்க. அந்த வீட்டு அக்காதான். கல்யாணம் ஆகி வேற ஊருக்குப் போனவங்க. அவங்க அம்மா வீட்டுக்கு வந்திருக்காங்க. என்கிட்ட நல்லா பேசுவாங்க. 'என்ன படிக்கிறே'ன்னு கேட்டாங்க. 'நான் எதுவும் படிக்கலக்கா... வேலைக்குப் போறேன்'னு சொன்னேன். 'ஏதாவது டிகிரி படி... இப்படி இருக்காத. நானும் படிக்கல, கல்யாணத்துக்கு அப்புறம் படிப்பேன்னு பிடிவாதம் பிடிச்சி படிச்சி இப்ப ஒரு வேலைல இருக்கேன். படிடா தம்பி'ன்னு சொன்னாங்க."

“ம்ம்ம்... நல்ல அட்வைஸ் பண்ணி இருக்காங்க!”

“நான் சிரிச்சிட்டு வந்துட்டேன். மறுநாள் அவங்க ஊருக்குப் போறதுக்கு முன்னாடி எங்க வீட்டுக்கு வந்தாங்க. ‘நல்ல பையன்தானே... அவனைப் படிக்க வைங்க’ன்னு அப்பா அம்மாகிட்ட சொல்லிட்டு, ‘இத ஃபீஸ் செலவுக்கு வைச்சிக்க. அக்காவால முடிஞ்சது’ன்னு கையில ஐயாயிரம் ரூபாயைச் சட்டுன்னு வச்சிட்டாங்க!”

“செம!”

‘‘நான் தயங்கினேன். ‘வேணாம்க்கா’ன்னு சொன்னேன். ‘இது நான் சேர்த்து வச்சிருந்த காசுதான். நீ வச்சிக்க. கையில ஐயாயிரம் இருக்கு, ஃபீஸ் கட்ட உதவி செய்யுங்கன்னு போய் யார்கிட்ட வேணும்னாலும் கேளு, தருவாங்க. போய்ப் படி’ன்னு சொன்னாங்க. நான் ஏற்கனவே பேப்பர்ல இந்த மாஸ் மீடியா பத்தி படிச்சிருக்கேன். மூணு வருஷம் கோர்ஸ். வருஷம் ஃபீஸ் முப்பதாயிரம். காலேஜ்ல போய்க் கேட்டேன். முதல்ல பத்தாயிரம் கட்டி சேர்ந்துக்கச் சொல்லிட்டாங்க...”



“அப்புறம்?”

“நந்தனத்துல ஒரு சித்தப்பா ஆட்டோ ஓட்டுறாரு. அவர்கிட்ட போய் கடன் கேட்டேன். அவரு மீதிப் பணம் கொடுத்தார். போய் காலேஜ்ல சேர்ந்துட்டேன். இப்ப மூணாவது வருஷமும் வந்துட்டது. காலேஜ்ல என் சீனியர் சொன்ன மாதிரி, படிச்சிக்கிட்டே ஒரு சின்ன கம்பெனில வேலை பாக்குறேன். இன்டீரியர் டெக்கரேஷன் செய்யற கம்பெனி. அதுல எனக்கு ஏழாயிரம் சம்பளம் கிடைக்கும். சித்தப்பா இப்படி ஆட்டோ வாடகைக்கு எடுத்துக் கொடுப்பாரு. ஃப்ரீ டைம்ல அதையும் ஓட்டுவேன். காலேஜ் ஃபீஸுக்கும் பணம் கிடைக்குது, வீட்டுக்கும் மாசம் 10 ஆயிரம் கொடுக்கறேன்.”

“ஒரு சந்தேகம், காலேஜ்ல ஒழுங்கா பாடம் புரிஞ்சி படிக்கிறீங்களா? தண்ணியடிச்சிட்டு பசங்களோட செட் சேர்ந்து சுத்துற பழக்கம் இருக்கா?”

“ஓரளவுக்கு நல்லாவே படிப்பேண்ணா. நான் தமிழ் மீடியம். காலேஜ்ல எனக்குத் தனியா தமிழ்ல ஒருமுறை சொல்லித் தருவாங்க. எல்லா சப்ஜெக்டும் பாஸ்தான். ப்ராக்டிக்கல் எல்லாம் நல்லாவே பண்றேன். சின்ன வயசுலேயே செட்டு சேர மாட்டேன். பசங்களோட நல்லா சிரிச்சிப் பேசுவேன். ஆனா செட்டுக்குள்ள போகமாட்டேன்!”

அவரிடம் நீண்ட நேரம் பேசியதில், அந்தப் பக்கத்து வீட்டு அக்கா சட்டென்று பணம் கொடுத்ததுதான், அவருக்குள் ‘படிக்க வேண்டும்’ என்ற மின்னல் தோன்றக் காரணமாக இருந்திருக்கிறது. “அந்த அக்கா அப்படி பணம் கொடுத்ததை யாருமே எதிர்பாக்கல. ஐயாயிரத்தை என் கையில திணிக்கும்போது, நாம படிக்க முடியும்னு தோணுச்சி!” என்றார்.

அவருக்கு இன்னொரு கோரிக்கையும் இருந்தது. ‘‘கவர்மென்ட் காலேஜ்ல படிச்சா, அரசாங்கம் அவங்களுக்கு ஸ்காலர்ஷிப், ஃபீஸ் கன்செஷன் எல்லாம் கொடுக்குது. ஆனா ஜஸ்ட் பாஸ் பண்ணி, கவர்மென்ட் காலேஜ்ல சீட் கிடைக்காம இருக்கிற பசங்களுக்கும் ஏதாவது செய்யலாம்ல?” என்றார்.

அந்த இளைஞரிடம் பேசியதில் இரண்டு விஷயங்கள் புரிந்தன...

- படித்த மாணவர்களைக் கண்காணிக்கும் பொறுப்பை விட, படிக்காத மாணவர்களைக் கண்காணித்து நல்வழி காட்டும் பொறுப்பு அரசுக்கு இருக்கிறது.
- ஒரு விளக்கு அணையப்போகும் போது, ஓடிவந்து திரியை மெலிதாகத் தூண்டிவிட்டு, மறுபடியும் எரிய வைக்கும் அந்தத் தருணத்தை விளக்குகளால் மறக்க முடியாது.

**– விஜயபாஸ்கர் விஜய்**



# செய்யக்கூடாத 10 விஷயங்கள்!

ஒரு நிறுவனத்தின் மேனேஜர் ஓய்வுபெற்றார். புது மேனேஜரைக் கண்டுபிடிக்க இன்டர்வியூ வைத்தார் நிர்வாகி. வந்த எல்லோரிடமும் ஒரே ஒரு எளிமையான கேள்வியை மட்டுமே கேட்டார். 'இரண்டும் இரண்டும் எவ்வளவு?' என்பதே அந்தக் கேள்வி.

இன்டர்வியூவுக்கு முதலில் வந்தவர், தத்துவம் படித்த பட்டதாரி. "இரண்டையும் இரண்டையும் சேர்த்தால் 22 என்று எழுதலாம்" என்றார் அவர். சமூகவியல் படித்த ஒருவர் அடுத்து வந்தார். "எனக்கு விடை தெரியவில்லை. இருந்தாலும், இதற்குப் பதில் என்னவாக இருக்கக்கூடும் என்று நாம் இருவரும் விவாதிப்பதற்கு ஒரு வாய்ப்புக் கிடைத்திருக்கிறது" என்று நீண்ட நேரம் பேச ஆரம்பித்தார்.

மூன்றாவதாக வந்தவர் ஓர் எஞ்சினியர். அவர் தன் லேப்டாப்பில் தட்டி ஏதேதோ கணக்குகள் போட்டு, 3.9க்கும் 4.1க்கும் இடையில் எங்கோ இதற்கான விடை இருக்கிறது" என்றார். அடுத்து வந்தவர் சட்டம் படித்தவர். "உச்ச நீதிமன்றத்தில் 50 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த வழக்கு ஒன்றில், இதற்கான விடை நான்கு என்று தீர்ப்பு சொன்னதாக ஞாபகம்" என்றார்.

கடைசியாக வந்தவர், இதற்கு முன்பு ஆடிட்டராகப் பணிபுரிந்தவர். அவரிடம் இந்தக் கேள்வியை நிர்வாகி கேட்டார். அவர் ரகசியமான குரலில் நிர்வாகியிடம் சொன்னார்... "இதுக்குப் பதில் எதுவா வேணும்னாலும் இருக்கட்டும். உங்களுக்கு எவ்வளவு வரணும்னு சொல்லுங்க. அதை வர வச்சிடுவோம்!" உடனே அவருக்கு வேலை கிடைத்துவிட்டது.

இந்த நிர்வாகி மாதிரியோ, அவரிடம் வேலை கேட்டு வந்தவர்கள் போலவோ இல்லாமல் வாழ்க்கையில் நேர்வழியில் ஜெயிக்க வேண்டுமா? நீங்கள் செய்யக்கூடாத 10 விஷயங்கள்:

- நீங்கள் எந்த வேலை அல்லது தொழிலில் இருந்தாலும், அதில் நிகழும் தொழில்நுட்ப மாற்றங்களைக் கவனியுங்கள். அதற்கு ஏற்றபடி மாறிக்கொள்வதை எப்போதும் நிறுத்தாதீர்கள்.
- வாழ்க்கை முழுவதும் கற்றுக்கொள்வதை நிறுத்தாதீர்கள். திறந்த மனசுடன் கற்றுக்கொள்பவர்களே வாழ்வில் ஜெயிக்கிறார்கள்.
- எவரையும் கண்மூடித்தனமாக நம்பாதீர்கள். அது ஆபத்தில் முடியலாம். நம்பகமான மனிதர் என்று தெரிந்த பிறகு எவரையும் சந்தேகப்படாதீர்கள். அது வாழ்க்கை முழுக்க வருந்த வைக்கும்.
- வீடு, வாகனம் என்று சொத்துகளாக மாறும் பொருட்களை வாங்குவதற்குக் கடன் பெற்றால் தவறில்லை. ஆடம்பரச் செலவுகளுக்காகக் கடன் பெற்றால், அது தவறு.
- உங்கள் இலக்குகளிலிருந்து எதற்காகவும், யாருக்காகவும் சமரசம் செய்துகொள்ளாதீர்கள்.
- யாரையும் அவர்களின் தோற்றத்தை வைத்தோ, உடைகளை வைத்தோ மதிப்பிடாதீர்கள்.
- பணம் சம்பாதிப்பதே இலக்கு என்று உழைக்காதீர்கள். உங்கள் பணத்தை எளிதாகப் பெருகவைக்கும் முதலீட்டு வழிகளைக் கண்டடையுங்கள்.
- எப்போதும் எதிர்மறையாகவே பேசும் மனிதர்களின் நட்பு வேண்டாம். அவர்கள் உங்கள் சக்தியை உறிஞ்சிவிடுவார்கள்.
- மது, புகை என்று எந்தப் போதைக்கும் அடிமையாகாதீர்கள். புகழ் போதைக்கும் அடிமையாக வேண்டாம். இதெல்லாம் உங்களைக் கவிழ்த்துவிடும்.
- குறுக்கு வழிகளை விரும்பாதீர்கள். அவை தற்காலிக வெற்றி தரலாம். நிரந்தரமாக நிம்மதியைக் குலைத்துவிடும். ●

# மீண்டும் ஒரு முயற்சி செய்யுங்கள்!



வாழ்வில் அடுத்தடுத்துத் தோல்விகளைச் சந்தித்துக் கடுமையான மன உளைச்சலில் இருந்த இளைஞன் ஒருவன், ஒரு துறவியைத் தேடிப் போனான். "என்னைச் சுற்றி இருக்கும் எல்லோரும் அத்தனை சந்தோஷமாக இருக்கிறார்கள். எனக்கு மட்டும் ஏன் இத்தனை துன்பங்கள் வரிசை கட்டி வருகின்றன?" என்று கேட்டான்.

துறவி சிரித்தார். ''இதிலிருந்து தப்பித்துக்கொள்ளலாம் என்று நினைக்கிறாயா? முடியாது. இதைவிட அதில் துன்பங்கள் இனிவரும் காலங்களில் உனக்கு ஏற்படும்'' என்றார். "நான் தீர்வு தேடி வந்திருக்கிறேன். எனக்குச் சாபம் கொடுக்கிறீர்களா?" என்று கத்தினான் அவன்.

துறவி அவனை உன்னிப்பாகக் கவனித்தார். "எப்போதும் போர் நடக்கும் நாட்டில் வாழ்கிறாயா? துப்பாக்கியின் தோட்டாவோ, விமானம் வீசும் வெடிகுண்டோ எந்த நிமிடத்திலும் கொன்றுவிடும் என்ற அபாயத்தில் வாழ்கிறாயா?" எனக் கேட்டார்.

"இல்லை" என்றான் அவன்.

''உனக்கு என்று குடும்பமே இல்லையா? ஆதரவற்று வீதியில் நிற்கிறாயா?"

"இல்லை!"

''உடலில் ஏதேனும் குறை உள்ளதா? குணப்படுத்தவே முடியாத மோசமான நோய் உனக்கு இருக்கிறதா?"

"இல்லை!"

''செய்யாத குற்றத்துக்குப் பல வருடங்கள் சிறையில் இருந்தாயா?"

"இல்லை!"

இப்படி அவர் வரிசையாக நிறைய விஷயங்களைக் கேட்க, அவன் எல்லாவற்றுக்கும் 'இல்லை' என்றே பதில் சொன்னான்.

''சரி, உலகின் துன்பங்கள் எல்லாவற்றையும் பட்டியல் போட்டுவிட்டேன். இவற்றில் எதுவுமே உனக்கு இல்லை என்கிறாய். பிறகு என்னதான் உன் பிரச்னை?" என்று கேட்டார் துறவி.

'உலகில் இத்தனை துன்பங்கள் இருக்கின்றனவா? நல்லவேளை, நாம் இவ்வளவு மோசமாக இல்லை' என்ற எண்ணமே அவனுக்கு ஆசுவாசம் தந்திருந்தது. என்றாலும் அவன் புலம்பினான். "எனக்கு வேலை போய்விட்டது. மாதம் பிறந்தால் கட்ட வேண்டிய கடன் தவணைகள் ஏராளமாக இருக்கின்றன. குடும்பத்தினரைக் கௌரவமாகப் பார்த்துக்கொள்ள வேண்டும். இதுவரை 10 இன்டர்வியூக்களுக்குப் போய் வந்துவிட்டேன். எனக்கு வேலை கிடைக்கவில்லை. என்னால் இப்படிப்பட்ட சூழலைச் சமாளிக்க முடியவில்லை" என்றான்.

"சரி, இதை நீ இப்படிப் பார். உனக்கு அன்பான குடும்பம் இருக்கிறது. கடன்கள் வாங்கும் அளவுக்குத் தகுதி இருக்கிறது. நன்கு உழைக்கும் அளவுக்கு ஆரோக்கியமாக இருக்கிறாய். நல்ல கல்வி இருக்கிறது. வேலை பார்த்த அனுபவம் இருக்கிறது. நீ சந்தோஷப்படுவதற்கு இத்தனை காரணங்கள் இருக்கும்போது, கவலைப்பட வேண்டிய காரணங்களை மட்டும் ஏன் மனதில் சுமந்துகொண்டு திரிகிறாய்?" என்று கேட்டர்.

அவனுக்குள் ஏதோ வெளிச்சம் பிறந்த மாதிரி இருந்தது. "மகிழ்ச்சி என்பது வெளியில் தேடுவது கிடையாது. நம் உள்ளுக்குள் அது பிறக்க வேண்டும். மகிழ்ச்சி அடைவதற்கு 100 காரணங்கள் இருந்தாலும், கவலை தரும் 10 காரணங்களை மட்டுமே நினைத்துக்கொண்டு இருந்தால் எப்படி? மகிழ்ச்சியும் தன்னம்பிக்கையுமாக இன்னும் ஒருமுறை முயற்சி செய்து பார். உனக்கு வேலை கிடைக்கும்" என்றார் துறவி. அவன் தெளிவுபெற்றுக் கிளம்பிப் போனான்.●



# கிழக்கின் கேம்பிரிட்ஜ் உருவான மாபெரும் கல்விப் போராட்டம்!

தமிழகப் பொதுக்கல்விப் போராளிகள் 10

ஆயிஷா. இரா.நடராசன்

தமிழகத்தில் பள்ளிக்கல்வியும் உயர்கல்வியும் இந்திய அளவில் தனித்துச் சாதனைப் போக்கைக் கடைப்பிடிப்பதை நாம் பார்க்கிறோம். சங்க காலம் தொட்டு நம் கல்வி இப்படித் தனித்தே மிளிர்கிறது. 'சங்க காலக் கல்வி முறைப்படுத்தப்படாத, ஆனால் சிறப்பான கல்வி' என்று வரலாற்று அறிஞர் தொ.பரமசிவம் குறிப்பிடுவார்.

'கல்லுதல்' என்கிற சொல்லிலிருந்து கல்வி என்கிற சொல் வந்திருக்க வேண்டும். கல்லுதல் என்றால் தோண்டி எடுத்தல். ஒருவருக்குள் இருக்கிற திறமைகளைத் தோண்டி எடுப்பதற்காகப் பயன்படுத்தப்படும் கருவி கல்வி. அந்தக் கருவியை இயக்கக் கற்றவர் ஆசிரியர். எனவே சங்க காலத்தில் விருப்பமுடைய யாவருக்கும் கல்வி போதிக்கப்பட்டது. தொல்காப்பியம் 'ஓதர் பிரிவு' என்பது குறித்துப் பேசுகிறது. ஓதல் பிரிவு என்பது, கல்வி கற்பதற்காக ஏனைய ஊர்களுக்குச் செல்ல வேண்டிக் குடும்பத்தையும் ஊரையும் பிரிந்திருப்பது ஆகும். கல்வி கற்பதற்கான பிரிவின் காலகட்டம் மூன்று ஆண்டுகள் என்கிறது தொல்காப்பியம். 'பள்ளி' என்கிற சொல்லை முதலில் பயன்படுத்தியது சிலப்பதிகாரம். 'கற்கும் பள்ளி' என்று திவாகர நிகண்டு குறிப்பிடுகிறது. கல்லூரி என்கிற சொல் சீவக சிந்தாமணியில் வந்துவிட்டது.

இவை அனைத்துமே கி.பி இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த இலக்கியங்கள். ஆனால், இடையில் சமஸ்கிருத மனுநீதி வர்ணாசிரம ஆட்சிகள் கல்வியைச் சின்னாபின்னப்படுத்தின. நால் வகை வர்ணங்களைத் திணித்து, வேறு வகைக் கல்விக்குத் தமிழகம் தாவியது. இன்று நம் கல்வியை மிக மோசமாக விமர்சிப்பவர்கள், தலைசிறந்த கல்வி என்று குருகுலக் கல்வியைச் சொல்கிறார்கள். இதிலிருக்கும் குரு என்கிற சொல்லை நீக்கிப் பாருங்கள். குலக் கல்வி என்கிற சொல் கிடைக்கும். தந்தையின் தொழிலை மகன் கற்றுக்கொள்வதுதான் குலக் கல்வி. கோயில்களில் உட்கார்ந்துகொண்டு, மதம் சம்பந்தப்பட்ட வேதங்களையும் சம்பிரதாயங்களையும் சடங்குகளையும் எப்படி எல்லாம் தீட்டு பார்க்கவேண்டும் என்கின்ற பாகுபாட்டையும் சொல்லித் தரும் ஒருவகைக் கல்வியாகத்தான் குருகுலக் கல்வி இருந்திருக்கிறது. இதற்குச் சான்றுகள் உள்ளன.

இத்தகைய கல்வியை எதிர்த்து நடைபெற்ற போராட்டங்கள் ஒன்றிரண்டு அல்ல. அவற்றின் தொடக்கமாக நாம் போர்ச்சுக்கீசியர்கள் புன்னைக்காயலில் வந்து 1567–ம் ஆண்டு ஒரு பள்ளியைத் தொடங்கிய முயற்சியைச் சொல்லலாம். ஃப்ரான்சிஸ் சேவியர் என்கின்ற அந்த அற்புத மாமனிதர் பிரான்ஸ் நாட்டிலிருந்து இந்தியாவிற்கு வந்து சென்னை தாமஸ் மவுண்ட் தேவாலயத்தை உருவாக்கிய காலகட்டம் அது.

அவர்களுடைய நோக்கம் மதமாற்றம் செய்வது என்று சொல்லி அந்தக் கல்விப் புரட்சியை நாம் புறம்தள்ளிவிட முடியாது என்பதை இந்தத் தொடரின் பல அத்தியாயங்களில் பார்த்திருக்கிறோம்.

இத்தாலியிலிருந்து வந்த வீரமாமுனிவரும், ஜெர்மனியிலிருந்து வந்த ஸ்வார்ட்ஸ் என்கிற அடிகளாரும், அனைவருக்குமான பொதுக் கல்விக்காகவே தங்கள் உயிரைப் பணயம் வைத்து செயலாற்றியதை ஏற்கனவே கண்டோம். அவ்வகையில் திருச்சியில் உள்ள செயின்ட் ஜோசப் என்கின்ற ஒரு கல்வி வளாகத்தின் கதை நம்மைத் திகைக்க வைக்கும் அற்புதத் தியாகம் ஆகும். ‘கிழக்கின் கேம்பிரிட்ஜ்’ என்று திருச்சியைச் சொல்கிறார்கள். செயின்ட் ஜோசப் பள்ளி, கல்லூரியாகவும் இருந்து ஏ.பி.ஜே. அப்துல் கலாம், போராளியான ஸ்டேன் ஸ்வாமி உட்பட பலரை உருவாக்கி உயர்ந்து நிற்கிறது.

இந்தக் கல்விக் கோயிலின் தொடக்கம் அறிந்துகொள்ள நாம் 1837–ம் ஆண்டை நோக்கிச் செல்ல வேண்டும். பிரிட்டிஷ்காரர்களின் மெக்காலே கல்வி அறிமுகமாகி, இரண்டு ஆண்டுகள்தான் ஆகியிருந்தன. கொல்கத்தாவிலிருந்து ஆட்சி செய்து கொண்டிருந்த ஆங்கிலேயர்கள், தமிழகக் கல்விக்குள் தலையிட முடியாத அளவிற்குத் தொலைவில் இருந்தார்கள். பள்ளிக்கல்விக்குள் நுழைகின்ற அப்போதைய தமிழக குழந்தைகளின் விகிதாச்சாரம் 1% கூட இல்லை.

இந்தச் சூழலில் பிரான்ஸ் நாட்டிலிருந்து அருட்தந்தையர்கள் ஜோசப் கார்னியர் மற்றும் லூயிஸ் கார்னியர் எனும் சகோதரர்கள் புதுச்சேரியில் வந்து இறங்குகிறார்கள். இவர்களுடன் பயணித்து வந்தவர் அருட்தந்தை ஆடிபர்ட் அடிகளார். சமூகத்தில் வர்ணாசிரமமும் சநாதனமும் தலைவிரித்து ஆடிய காலம் அது. வறுமையும் நோயும் எங்கும் பரவியிருந்தது. கடும் பஞ்சத்தில் தமிழகம் தள்ளாடிக் கொண்டிருந்தது.

அருட்தந்தை ஆடிபர்ட் அடிகளார் நம் நாட்டில் வந்து இறங்கியபோது அவருக்கு வயது 24. அவர் எழுதிய அடிக்குறிப்புகள் இப்போதும் இணையத்தில் உள்ளன. மிகத் தெளிவான ஒரு விஷயத்தை முதலில் அவர் புரிந்துகொண்டார். தென்னிந்தியாவில் பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் மட்டுமல்ல... ஊரைவிட்டுத் தள்ளி இருளில் வாழ்ந்துகொண்டிருக்கிற தீண்டப்படாத மக்களும் இருப்பதை அருட்தந்தை ஆடிபர்ட் தன் குறிப்புகளில் தெளிவாக எழுதுகிறார். அவரது அடிக்குறிப்புகளை வெளியுலகிற்குக் கொண்டு வந்தவர், அவரோடு இணைபிரியாமல் உழைத்த அருட்தந்தை ஜெயர் (Cyr) ஆவார்.

அருட்தந்தை சகோதரர்களான ஜோசப் கார்னியரும் லூயிஸ் கார்னியரும் தாங்கள் செயல்படச் சிறப்பான இடமாகத் திருச்சிராப்பள்ளியைத் தேர்வு செய்தார்கள். 1844–ம் ஆண்டில் நகருக்கு வெளியே ஒரு வனாந்திரத்தில் சிறுகுடிசையில் புனித வளனார் பள்ளியின் கல்வி வளாகம் தொடங்கப்பட்டது. புனித ஜோசப் கொலாஜியம் என்று அதற்குப் பெயர் வைத்தார்கள்.

அப்போது தமிழகம் முழுவதுமே காலரா நோய் தீவிரமாகப் பரவிக்கொண்டிருந்தது. சேரிகளில் வசித்த மக்களிடையே காலரா மிக வேகமாகப் பரவியது. காரணம், தூய்மையற்ற தொழில்களில் அவர்கள் ஈடுபடுத்தப்பட்டார்கள். இந்த மக்களுக்கு நோய்வாய்ப்பட்டால் சிகிச்சை செய்வதற்கு யாருமே முன்வரவில்லை. ஏனெனில், அவர்களைத் தொடுவதே பாவம் என வருணாசிரமம் தன் சட்டங்களால் புகுத்தியிருந்தது. இந்த நிலையில் காலரா நோயால்




பாதிக்கப்பட்ட 38 குழந்தைகளை, தாங்கள் உருவாக்கியிருந்த குடிலில் வைத்து அருட்தந்தை ஆடிபர்ட் மருத்துவச் சேவை செய்து பராமரித்தார்.

அவருடன் வந்திருந்த அருட்தந்தை கார்னியர் சகோதரர்கள் இருவருமே காலரா நோயால் இறந்து போனார்கள். ஆடிபர்ட் அடிகளார், தனது உதவியாளர் ஜெயர் அடிகளாரை நாகப்பட்டினத்திற்கு காலரா சேவைகளைச் செய்வதற்காக அனுப்பி வைத்தார். மூன்று மாதங்கள் கழித்து அருட்தந்தை ஜெயர் அடிகளார் திருச்சி திரும்பி வந்தபொழுது, ஆடிபர்ட் அடிகளார் தன்னைத் தேடி வந்த குழந்தைகள் அனைவருக்கும் சேவைகள் செய்ததில் காலரா நோய்க்கு ஆட்பட்டு பலியாகிவிட்டதை அறிந்து மனம் நொந்தார்.

ஜெயர் அடிகளார் அதே சிறு குடிசையில் இருந்து, புனித ஜோசப் கொலாஜியம் என்கின்ற கல்விப் புரட்சியைத் தொடர்ந்தார். கொலாஜியம் என்றால் உயர்நிலைப்பள்ளி மற்றும் அத்துடன் இணைந்த உயர்கல்வி என்று அர்த்தம். அயர்லாந்து நாட்டு மாணவர்களும் நம் தமிழகத்தைச் சேர்ந்த

7 மாணவர்களும் புதுவையின் மூன்று மாணவர்களுமாக இணைந்து முதல் கல்விச் சேவை ஏற்கனவே உருவாகியிருந்தது.

1845 ஜூலை இரண்டாம் நாள் அருட்தந்தை ஆடிபர்ட் இறந்து போனதன் காரணமாக கல்வி முற்றிலும் தடைபட்டது. ஜெயர் அதன்பின் நான்கு மாதங்கள் இடைவெளி விட்டு மீண்டும் பள்ளியைத் திறந்தார். உள்ளூர் மக்களுக்கு அதிகம் இடம் தருவது என்று அவர் முடிவு செய்தார். அப்போது இலங்கையிலிருந்து ஆறு பேர் கல்வி கற்க அங்கு இணைந்தார்கள். கொல்கத்தாவிலிருந்து சில மாணவர்கள் வந்து சேர்ந்தார்கள்.

ஆனால் உள்ளூரிலிருந்து எந்த வகையான ஆதரவும் கிடைக்கவில்லை. சேரிக் குழந்தைகளுக்கு வைத்தியம் பார்க்கப்பட்ட இடமென்பதால் சாதி இந்துக்கள் அந்த இடத்திற்குள் ஊரார் யாரும் நுழைவதைத் தடை விதித்தார்கள். மூங்கில்களால் ஊருக்கு எல்லையில் வேலிகள்கூட அமைக்கப்பட்டன. இத்தகைய கொடூரமான தாக்குதலை அருட்தந்தையர்கள் எதிர்பார்க்கவில்லை. 1848–ல் இந்த வளாகத்திற்குத் தீ வைக்கப்பட்டது. நூலகம் உட்பட அனைத்தும் எரிந்து சாம்பலாகின. ஆனால் அருட்தந்தையர்கள் விழித்திருந்ததால், இரவு 11:00 மணிக்கு நடைபெற்ற இந்தத் துயரச் சம்பவத்தில் மாணவர்கள் யாரும் இறந்து போகாமல் காப்பாற்றப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தை அறிந்த தஞ்சாவூர் கலெக்டராக இருந்த சர் ஹிஸ்டரி மாட்டேகோ நேரில் வந்து பார்வையிட்டார். உடனடியாக மாற்று இடத்தில் ஒரு கட்டடத்தை அமைத்துக் கொடுக்க அவர் அந்தக் காலகட்டத்திலேயே ரூ.500 பணம் ஒதுக்கினார். கல் கட்டடம் ஒன்று விரைவில் எழுப்பப்பட்டது. இந்தச் சம்பவத்தின் சாட்சியாக இப்போதும் அந்தக் கட்டடம் செயின்ட் ஜோசப் பள்ளி வளாகத்திற்குள் இருப்பதைப் பார்க்கலாம்.

1852–ம் ஆண்டு ஒரு மாபெரும் புயல் நாகப்பட்டினத்தைத் தாக்கியது. அப்போது வீடு இழந்த மக்களுக்குச் சேவை புரிவதற்காக நாகப்பட்டினம் விரைந்த அருட்தந்தை ஜெயர், அங்கு குடும்பத்தை இழந்து அநாதைகளாக்கப்பட்ட 42 சிறார்களை அழைத்து வந்து புனித ஜோசப் வளாகத்தில் தங்கிக் கல்வி கற்க வசதிகள் செய்து கொடுத்தார். உயர்சாதி இந்துக்கள் தவிர ஏனையவர்கள் ஆதரவு பெருகத் தொடங்கியது. திருச்சியைக் ‘கிழக்கின் கேம்பிரிட்ஜ்’ என்று அழைக்கும் அளவிற்கு மிகத் தரமான கல்விச் சேவையை வழங்கிய அந்தப் பிரமாண்டக் கல்விப்புரட்சியின் தொடக்கம் எவ்வளவு பெரிய போராட்டம் என்பதை வரலாறு மறக்கக்கூடாது. ●


# உங்கள் வீட்டுக்கே வர வேண்டுமா?

**யாதும்** நமது கல்வி - நமது சூழல் - நமது பணி

**சந்தாதாரர் ஆகுங்கள்!**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | | | |
| முகவரி | | | |
| தொலைபேசி | | அலைபேசி | |
| மின்னஞ்சல் | | | |

**டிக் செய்யவும்**

☐ **ஓர் ஆண்டு ரூ.240**

☐ **இரண்டு ஆண்டுகள் ரூ.450**

காசோலை / வரைவோலை மூலம் அனுப்பலாம். KARU CREATIONS என்ற பெயரில் செக் / டி.டி. அனுப்பவும். பின்புறம் உங்கள் பெயர், ஊர் எழுதவும்.

இப்படிவத்தை நிரப்பி செக் / டி.டி.யுடன் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பவும்:

**யாதும்**
தரு மீடியா (பி) லிட்.,
10/55, ராஜு தெரு, மேற்கு மாம்பலம்,
சென்னை – 600 033.
போன்: 99529 20801
email: contactyadhum@gmail.com



# உன்னதமான உணவு விதிகள்!

- நம் மண்ணில் எது அதிகம் விளைகிறதோ, அதுவே நாம் சாப்பிட ஏற்ற உணவு. இயற்கை அப்படித்தான் நமக்கு வரம் அளிக்கிறது. வெளிநாட்டிலிருந்து பாக்கெட்டில் வரும் உணவும், கொழுப்பு நிறைந்த சீன உணவுகளும் நமக்கு ஏற்றவை அல்ல.
- ஒரு பருவத்தில் எது அதிகம் கிடைக்கிறதோ, அதுவே அந்தப் பருவத்தில் சாப்பிடத் தகுந்த உணவு. கோடையில் கிடைக்கும் வெள்ளரியும் தர்ப்பூசணியும் அந்த நேரத்தில் சாப்பிட ஏற்றவை. குளிர் காலத்தில் சாப்பிடக்கூடாதவை.
- ஆவியில் வேகவைக்கும் உணவுப்பழக்கமே நம்முடையது. எண்ணெய் ஊற்றி ஊற்றி உணவுகளைப் பொரிப்பது இப்போது கற்றுக்கொண்ட கெட்ட பழக்கம்.
- ஆரோக்கிய உணவுப்பழக்கத்தைச் சிறுவயதிலிருந்தே குழந்தைகளுக்குக் கற்றுத்தர வேண்டும். இளம்வயதில் அறிமுகப்படுத்தும் சுவைகளே காலம் முழுக்க நிலைப்பதால், செயற்கை சுவையூட்டிகள் சேர்க்கப்படாத இயற்கையான நம் பாரம்பரிய உணவின் சுவையை அவர்களுக்குப் பழக்க வேண்டும்.
- ஒவ்வொரு வேளை உணவிலும் காய்கறிகள் கட்டாயம் இருக்க வேண்டும். முற்பகலிலும் மாலையிலும் நொறுக்குத்தீனிகளுக்குப் பதிலாகப் பழங்களும், பச்சையாகச் சாப்பிட முடிகிற காய்கறிகளும் சாப்பிட வேண்டும். இதுவே ஆரோக்கிய டயட்.
- இறைச்சி சாப்பிடாதவர்களுக்குப் போதுமான நார்ச்சத்து கிடைப்பதில்லை. அவர்கள் தினசரி உணவில் ஒரு கீரையை அவசியம் சாப்பிட வேண்டும்.
- உங்கள் உணவு பல வண்ணங்களைக் கொண்டதாக இருக்க வேண்டும். கீரையின் பச்சை, கேரட்டின் சிவப்பு, ஆரஞ்சுப் பழத்தின் மஞ்சள், பீட்ரூட்டின் ஊதா நிறம் என ஒவ்வொன்றும் ஒவ்வொருவிதமான ஆன்டி ஆக்சிடென்ட் மற்றும் ஊட்டச்சத்துகளை வழங்குபவை. சீனர்களின் பாரம்பரிய உணவு, ஒவ்வொரு நாளும் ஐந்து வண்ணங்கள் அடங்கியதாக இருக்குமாம்.
- உணவை நன்கு மென்று சாப்பிடுபவர்களே, ஆரோக்கிய டயட் உண்பவர்கள். நம் வயிறு நிரம்பிவிட்டதை மூளை உணர்வதற்குச் சில நிமிடங்கள் ஆகின்றன. ஆனால், வேகமாகச் சாப்பிடுபவர்கள் இதை உணராமல் அளவுக்கு மீறிச் சாப்பிட்டு விடுகிறார்கள். மென்று நிதானமாக உண்பவர்கள், அளவு தெரிந்து சாப்பிடுகிறார்கள். அதனால், அவர்கள் ஆரோக்கியம் பெறுகிறார்கள்.
- உலகிலேயே ஜப்பானியர்கள்தான் ஆரோக்கியமாகச் சாப்பிடுவதாகச் சொல்லப்படுகிறது. அவர்கள் வயிறு முட்டச் சாப்பிடுவதில்லை. முக்கால் வயிறு நிரம்பியதுமே திருப்தியாகி எழுந்துவிடுகிறார்கள்.
- பிரெஞ்சு ஃப்ரை, பாஸ்தா, பானிபூரி எனத் துரித உணவுகளுக்கு மனம் ஏங்கினால், குறைந்தபட்சம் அவற்றை வீட்டில் சமைத்துச் சாப்பிடுங்கள். சுத்தமாக இருக்கும். ஆபத்தான சுவையூட்டிகளையும் வேதிப்பொருட்களையும் சேர்க்க மாட்டீர்கள். நல்ல எண்ணெயில் சமைப்பீர்கள்.

திரைக்கலைஞர் சிவகுமார் அவர்கள் தனது கல்வி அறக்கட்டளை மூலம், கடந்த 44 ஆண்டுகளாக பிளஸ் 2 தேர்வில் நல்ல மதிப்பெண்கள் எடுத்த மாணவர்களைத் தேர்ந்தெடுத்துப் பரிசளித்துக் கௌரவித்து வருகிறார். ஸ்ரீ சிவகுமார் கல்வி அறக்கட்டளையின் 45–ம் ஆண்டு நிகழ்வு, சென்னையில் நடைபெற்றது. விழாவில் 25 மாணவ, மாணவிகளுக்குத் தலா ரூ.10,000/– வீதம் மொத்தம் ரூ. 2,50,000/– (இரண்டு லட்சம் ஐம்பதாயிரம்) பரிசளிக்கப்பட்டது. இத்துடன் திண்டிவனம் கல்வி மேம்பாட்டுக் குழு நடத்தும் எளிய மாணவர்களுக்கான தாய்த்தமிழ்ப் பள்ளிக்கு ரூபாய் ஒரு லட்சம் நிதியுதவியும், மூத்த ஓவியக் கலைஞர் மாயா (G.R.மகாதேவன்) அவர்களுக்கு ரூபாய் ஒரு லட்சம் நிதிநல்கையும் வழங்கப்பட்டது.

பெண் கல்விக்கு அர்ப்பணிப்பு மிக்க பணிகளைச் செய்துவரும் விருதுநகர் மாவட்டம் K.கம்மாப்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளித் தலைமை ஆசிரியர் திரு.பிரகாஷ் அவர்கள் கௌரவிக்கப்பட்டார். அந்தப் பள்ளி அமைந்திருக்கும் கிராமப்பகுதியில் 6 முதல் 12–ம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு மாலை நேர வகுப்பு நடத்திட மாதம் ரூபாய் 12,000/– வீதம் ஒரு வருடத்திற்கு ரூபாய் 1,44,000/– வழங்கப்பட இருக்கிறது. திருவண்ணாமலை மாவட்டம் ஜவ்வாது மலைப் பகுதி கிளையூர் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளிக்குத் தலைமை ஆசிரியர் திரு. சங்கர் அவர்களின் அர்பணிப்பு மிக்க பணிகளைப் பாராட்டி, அப்பள்ளியின் அடிப்படைத் தேவைகளுக்காக ரூபாய் 40,000/– வழங்கப்பட இருக்கிறது. ஆக மொத்தம் ரூபாய் 6,44,000/– நிதிநல்கை வழங்கப்பட்டது.

மாணவர்களுக்குப் பரிசளிப்பு நிகழ்ச்சி நடந்தது. தொடர்ந்து பரிசு பெற்ற மாணவர்கள் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டனர். நிகழ்ச்சியில் பேசிய சிவகுமார் அவர்கள், “25 ஆண்டுகள் என்

# ஸ்ரீ சிவகுமார் கல்வி அறக்கட்டளை பரிசளிப்பு விழா!






பொறுப்பில் இயங்கிய அறக்கட்டளையை, அதற்குப் பிறகு அகரம் ஃபவுண்டேஷன் பொறுப்பேற்றுச் சிறப்பாகக் கல்விப்பணி செய்து வருகிறது. சிறிய அளவில் ஏழை மாணவர்களுக்குச் செய்த உதவியை, என் பிள்ளைகள் இப்போது நல்ல முறையில் செய்து வருகிறார்கள். கல்வி ஒருவரின் வாழ்க்கைத் தரத்தை எந்தளவு உயர்த்தும் என்பதை நான் அனுபவப்பூர்வமா உணர்ந்திருக்கேன். என்னைப் போல ஏழ்மைக் குடும்பத்தில் பிறந்து நன்றாகப் படிக்கிற பிள்ளைகளுக்கு என்னால் முடிந்த உதவியைச் செய்வதில் மிகுந்த மனநிறைவு அடைகிறேன். தடைகளைத் தாண்டி பெற்ற முதல் வெற்றி இது. இன்னும் போக வேண்டிய பயணம் வெகுதூரம் உள்ளது. மாணவர்கள் தங்களுடைய கவனம் சிதறாமல், தொடர்ந்து வாழ்க்கையில் முன்னேற வேண்டும்" என்று கூறினார்.

திரைக் கலைஞர் கார்த்தி அவர்கள், "எங்கள் பாட்டி சொன்னது, 'எது செய்தாலும் தொடர்ந்து செய்ய வேண்டும்' என்பது. அந்தச் சொல்லுக்கு இணங்க இன்றளவும் எனது குடும்பத்தினர் இந்த நிகழ்ச்சியை நடத்தி வருகிறோம். எங்கள் தந்தையின் நூறாவது படத்தில் வந்த வருமானம் அனைத்தையும் வங்கியில் டெபாசிட் செய்துவிட்டு, அதில் வரும் வட்டியில் ஒவ்வொரு ஆண்டும் மாவட்டத்திலும் மாநிலத்திலும் முதல் மதிப்பெண் எடுத்த மாணாக்கர்களுக்குப் பரிசு வழங்கி வந்தனர். அன்று ஆயிரம் ரூபாய் என்பது ஒரு சவரன் தங்கத்திற்கும் அதிகமாக இருந்தது. முதல் மதிப்பெண் எடுப்பது மட்டும் முக்கியமல்ல, எந்த இடத்தில் எந்தச் சூழ்நிலையில் இருந்து எடுக்கிறார்கள் என்பது முக்கியம். அதையும் அறிந்து பின்னர் அகரம் அவர்களுக்குப் பரிசுத்தொகை கொடுக்க ஆரம்பித்தது. கிராமங்களில் உள்ள குழந்தைகள் சென்னை போன்ற நகரங்களில் வந்து படிக்கணும். நகரங்கள் தரும் Exposure காரணமாகத் தன்னம்பிக்கை கிடைக்கும். மாணவர்கள் தங்கள் எதிர்காலத்தைத் தீர்மானித்து அதனை நோக்கி வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்றால் படித்தாக வேண்டும்" என்று கூறினார்.

அகரம் ஃபவுண்டேஷன் நிறுவனர் திரைக் கலைஞர் சூர்யா அவர்கள், "மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கெனவும், வாழ்வின் அடுத்த பரிமாணத்தை நோக்கி அவர்களை அழைத்துச் செல்வதற்கும் அகரம் சவாலான பணிகளை முன்னெடுத்து வருகிறது. தன்னார்வலர்கள் பொறுப்பேற்று நடத்தும் அகரம் பணிகளுக்கு உந்துசக்தியாகப் பொருளாதாரத்தை வழங்கி உடன் நிற்கும் நன்கொடையாளர்கள், விதைத் திட்ட மாணவர்களின் கல்வி வாய்ப்பிற்காகத் தொடர்ந்து ஆதரவுக்கரம் வழங்கி அரவணைத்துக்கொள்ளும் கல்வி நிறுவனங்கள் என்று அனைவருக்கும் நன்றிகள். ஊர் கூடித் தேர் இழுப்பது போன்றுதான் அகரம் பணிகள். எளிய குடும்பங்களின் கல்வி மேம்பாட்டிற்காக ஒன்றிணைந்திருப்பது முன் எப்போதையும் விட இன்று அவசியமானதாக இருக்கிறது. இணைந்திருப்போம். அகரம் என்றாலே அதன் அர்ப்பணிப்புமிக்க தன்னார்வலர்களே. அவர்கள் ஒவ்வொருவருக்கும் இத்தருணத்தில் வாழ்த்துகளையும், நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்" என்றார்.

நிகழ்வில் பேராசிரியர் கல்யாணி, முனைவர் விஜய் அசோகன் ஆகியோர் உரையாற்றினர். விழா நிகழ்வை அகரம் விதை மாணவர்கள் சக்திவேல் மற்றும் விஜயலட்சுமி இருவரும் தொகுத்து வழங்கினர். மகாலட்சுமி நன்றி கூறினார். அகரம் தன்னார்வலர்கள், மாணவர்கள் விழாவில் கலந்து கொண்டனர்.

கற்றல் கதைகள்





# மற்றவர் உணர்வுகளை மதிப்போம்!

வியாபாரத்தை வெறும் லாபக் கணக்காகவே பார்க்கத் தெரிந்த அந்த இளைஞருக்கு இந்த மனிதாபிமானக் கணக்கு அதிர்ச்சி கொடுத்தது.

சாலையோரம் வடை சுட்டு விற்றுக்கொண்டிருந்தார் நடுத்தர வயதுப் பெண்மணி ஒருவர். சுவையாகவும் சுகாதாரமாகவும் இருப்பதால், நிறைய பேர் அவர் கடையில் வந்து வடை வாங்குவார்கள். பக்கத்து அலுவலகம் ஒன்றில் பணிபுரியும் சிலர் தினமுமே அந்தக் கடையில் வந்து வடை சாப்பிடுவார்கள்.

புதிதாக அந்த அலுவலகத்தில் சேர்ந்திருந்தார் ஓர் இளைஞர். பிசினஸ் நிர்வாகம் தொடர்பாகப் பெரிய கல்வி நிறுவனம் ஒன்றில் படித்துவிட்டு வந்திருந்தவர். அவர் அந்தப் பெண்மணிக்கு பிசினஸ் ஆலோசனை வழங்கினார்.

“வெறும் வடை மட்டும் சுட்டு விற்கிறீங்களே, இதோடு சேர்த்து டீ, காபியும் விற்றால் இன்னும் கூடுதல் வியாபாரம் நடக்கும். வடை சாப்பிட வருபவர்கள் டீயும் குடிப்பார்கள், டீ குடிக்க வருபவர்கள் வடையும் வாங்குவார்கள். நல்ல லாபம் கிடைக்குமே” என்றார் அந்த இளைஞர். ‘பல வழிகளில் வருமானத்தைப் பெருக்க வேண்டும்’ என்பது கல்லூரியில் அவருக்குச் சொல்லித் தந்த பாடம்.

அந்தப் பெண்மணி சிரித்தபடி, கொஞ்ச தூரத்தில் இருக்கும் ஒரு கடையைக் காட்டினார். “அந்த மனுஷன் டீ, காபி போட்டு விற்கிறார். அவரை நம்பி ஒரு குடும்பம் இருக்கு. நான் டீயும் சேர்த்து விற்க ஆரம்பிச்சா, அவருக்கு வியாபாரம் குறைஞ்சுடும். அப்புறம் அவர் குடும்பம் பாவம் இல்லையா?” என்று கேட்டார்.

மற்றவர்களின் உணர்வுகளை மதிக்கத் தெரிந்த இன்னொரு பெண்மணியின் கதை இது. அக்கம்பக்க வீடுகளில் வசிக்கும் கீதாவும் மாலாவும் நட்பாக இருந்தார்கள். இருவரும் ஒரே மாதிரியான வசதியுடன் இருந்தவர்கள்.

கீதாவின் கணவர் பணிபுரிந்த நிறுவனத்தில் நஷ்டம் ஏற்பட்டு, திடீரென அவருக்கு வேலை போய்விட்டது. ஏதேதோ தற்காலிக வேலைகளைச் செய்தபடி அவர் வேறு வேலை தேடிக்கொண்டிருந்தார். குடும்பம் தடுமாறியது.


பக்கத்து வீட்டு மாலாவிடம் அவ்வப்போது அரிசி, பருப்பு, எண்ணெய் என்று ஏதேதோ கடன் வாங்கி கீதா சமாளித்துக்கொண்டிருந்தார். சில சமயங்களில் அவரின் முகவாட்டம் பார்த்து, மாலாவே விசாரித்துவிட்டுத் தேவையானதைக் கொடுத்து அனுப்புவார். அவ்வப்போது அவரும் கீதாவிடம் போய், “உன்கிட்ட கொஞ்சம் கறிவேப்பிலை இருந்தால் கொடு. வீட்டுல சுத்தமா இல்லை” என்பது போல அதிகம் செலவில்லாத பொருட்களாகக் கடன் வாங்குவார். மாலாவின் மகன் ஒருநாள், “ஏன்மா, நம்மகிட்ட இருக்கிற பொருளையே ஏன் போய் பக்கத்து வீட்டில் கடன் வாங்குறே?” என்று கேட்டான்.

“காரணம் இருக்குடா! நாம அவங்களுக்கு எவ்வளவோ தர்றோம். ஆனால், ‘வாங்குற இடத்துலயே இருக்கோமே’ன்னு கூச்சப்பட்டுக்கிட்டு கீதா கேட்கத் தயங்கறாங்க. இப்படி அப்பப்ப ஏதாவது நாம வாங்கினா, ‘நாமளும் கொடுக்கிறோமே’ன்னு தயங்காம அடுத்த முறை கேட்பாங்க” என்றார் மாலா.

உணர்வுகளைப் புரிந்து உதவிகள் செய்வோம். ●



Owned, Published by T.J. GNANAVEL, 10/55, Raju Street, West Mambalam, Chennai - 600 033 &
Printed by B. ASHOK KUMAR at RATHNA OFFSET PRINTERS, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014. Editor : T.J. GNANAVEL



2D
ENTERTAINMENT
வருகிறது!
செப்டம்பர்
27
உங்கள் அபிமான
திரையரங்குகளில்
புரட்டாசி 11
கார்த்தி அர்விந்த் சுவாமி
மெய்யழகன்
எழுத்து & இயக்கம்
ச. பிரேம் குமார்
தயாரிப்பு
ஜோதிகா - சூர்யா
PHANTOM STUDIOS
IGENE
இணை தயாரிப்பு ராஜசேகர் கற்பூரசுந்தரபாண்டியன்
SAKTHI
think music

Yadhum Monthly - Registered with the Registrar of Newspapers for India under No. TNTAM/2016/69050.
Postal Registration No. TN/CC(S)DN/612/22-24.
WPP License No - TN/PMG(CCR)/WPP 665/2022-2024 Date of Publication First week of every month.
Posted at Egmore RMS (Patrika Channel) Posted on 5th to 11th of every month



வேர் பரப்பும் மரங்களுக்கு நீர் தரும் நிலமே ஆதாரம்!
கோடையின் கடுமை தவிர்க்க மழைநாளில் மரம் வளர்ப்போம்!
வீட்டைப் போலவே சூழலையும் பாதுகாப்போம்



மதிப்பிற்குரியவர்களுக்கு...
RAMRAJ ©
காட்டன்

- வேஷ்டிகள்
- சர்ட்டுகள்
- பனியன்கள்

Shop online @ www.ramrajcotton.in
கம்பெனி ஷோரூம் மற்றும் முன்னணி ஜவுளி நிறுவனங்களில் கிடைக்கும்
Follow us RamrajCottonofficial ramrajcotton ramrajcottonmedia

If undelivered
please return to

**யாதும்**
தரு மீடியா (பி) லிட்.,
10/55, ராஜு தெரு, மேற்கு மாம்பலம்,
சென்னை - 600 033.
போன்: 99529 20801